
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams
North America
SINCE 1988

பனிமலர்

# அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2057 / மாசி / பிப்ரவரி 2026




Federation of Tamil Sangams North America
SINCE 1988
பேரவையின் 39ஆவது தமிழ் விழா
சூலை 2, 3, 4, 2026 - நியூ செர்சி
FeTNA 39TH TAMIL CONVENTION
தாயகம் கடந்தும் தமிழ்மொழி வளர்ப்போம்!
New Jersey Tamil Peravai
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
நியூ செர்சி தமிழ்ப் பேரவையும்
இணைந்து நடத்தும்
பேரவையின்
39ஆவது தமிழ் விழா
சூலை 2, 3 & 4 - 2026
FeTNA 39TH TAMIL CONVENTION
NEW JERSEY - JULY 2, 3 & 4 - 2026
தாயகம் கடந்தும்
தமிழ் மொழி வளர்ப்போம்!
அனைவரையும் வருக... வருக...
என அன்புடன் வரவேற்கிறோம்!
To Register: https://fetna-convention.org
fetna.org | fetna-convention.org | njtamilperavai.org

# அருவி

## உள்ளே...


| | |
|---|---|
| பேரவைத் தலைவர் மடல் | 05 |
| பேரவை செயலாளர் மடல் | 07 |
| ஆசிரியர் மடல் | 10 |
| தொழில் நகரில் தொழில் முனைவோர் மாநாடு | 12 |
| ஹைக்கு கவிதைகள் | 17 |
| ஊழ் பற்றிய உலக சிந்தனை | 18 |
| தாயுமானவர்கள் | 20 |
| விஸ்கான்சின் தமிழ்ச்சங்கநிகழ்வுகள் | 22 |
| மினசோட்டா தமிழ்ச்சங்கம் | 24 |
| டென்னசி தமிழ்ச் சங்கம் | 27 |
| நெகிழிக் கப்பல் | 28 |
| தமிழ் பேசுகிறது! | 30 |
| ஷீலாவின் ஹைக்கூ | 31 |
| சிறுமை உலகில் சிதையும் சிறார்கள் | 32 |
| வியப்பு | 33 |
| புத்தகம் | 34 |
| வாழ்க்கை வாழ்வதற்கே! | 34 |
| தமிழிசை விழா - சென்னை | 35 |
| அயலகத் தமிழர் திருவிழா – சென்னை | 38 |
| மிச்சிகன் தமிழ்ச் சங்கம் | 42 |
| மில்வாக்கி மாநகர தமிழ்ச்சங்கம் | 44 |
| சின்சினாட்டி தமிழ்ச் சங்க நிகழ்வுகள் | 46 |
| மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம் | 48 |
| தமிழர் திருநாள் விழா நியூயார்க் தமிழ்க் கல்விக்கழகம் | 51 |
| ஐம்பத்தி ஆறாம் ஆண்டை தொடங்கி நியூயார்க் தமிழ்ச்சங்கம் | 53 |
| சான் பிரான்செஸ்கோ Bay Area தமிழ் மன்றம் | |
| பொங்கல் விழாக் கொண்டாட்டம் – 2026 | 54 |
| டுவின்சிட்டீஸ் தமிழ் அசோசியேசன் (TCTA MN) | 55 |
| சிகாகோ தமிழ்ச் சங்கம் | 56 |
| நியூஜெர்சி தமிழ்ச் சங்கம் | 57 |

# ஆசிரியர் குழு



**திருமலைஞானம் சிவஞானம்**
ஆசிரியர்
ரோசெஸ்டர் ஹில்ஸ், மிச்சிகன்



**மலர் நடராஜா**
இணை ஆசிரியர்
வடகொரலைனா



**Dr.வைத்திநாதன் செல்வராஜ்**
இணை ஆசிரியர்
மேடிசன், விஸ்கான்சின்



**ஜான்சிராணி பிரபாகரன்**
பேரவை இணைச்செயலாளர்
விஸ்கான்சின்



**பிளாரன்ஸ் கிறிஸ்டோ**
துணை ஆசிரியர்
அட்லாண்டா



**சுபா காரைக்குடி**
துணை ஆசிரியர்
நியூஜெர்சி



**நாகராஜன் ராஜேந்திரன்**
துணை ஆசிரியர்
மேசன், ஓஹியோ



**இந்துமதி ஜெயபால்**
துணை ஆசிரியர்
டப்ளின்



**கனகப்பிரியா சங்கர்ராஜ்**
துணை ஆசிரியர்
ஃபிரிஸ்கோ, டெக்சாஸ்



**வீரா கந்தசாமி**
துணை ஆசிரியர்
நியூயார்க்



**அருள்மொழி**
துணை ஆசிரியர்
சியாட்டல், வாஷிங்டன்



**விஜியகுமார் ரங்கசாமி**
துணை ஆசிரியர்
ஸ்பிரிங் ஹில்ஸ், டென்னஸி



**சுப்ரமணிய பெருமாள் திருநாவுக்கரசு**
துணை ஆசிரியர்
சால்ட் லேக் சிட்டி, UTAH

# தலைவர் மடல்

அன்புடையீர்,

வணக்கம்!

அனைவருக்கும் தமிழர் திருநாள் - பொங்கல் வாழ்த்துகள் !

பேரவை சார்பில் நடைபெற்ற சில சிறப்பான நிகழ்வுகளை இந்த இதழ் மூலம் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**கோவை - பன்னாட்டுத் தமிழர் தொழில் முனைவோர் மாநாடு**

வட அமெரிக்கா முழுவதும் உள்ள தமிழ் மக்களை ஒன்றிணைத்து தமிழ் மொழி, பண்பாடு, இலக்கியம், பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகளை இடையறாது நடத்தி வரும் நம் பேரவை, அதன் அடுத்த கட்டமாக முன்னெடுத்த பன்னாட்டுத் தமிழர் தொழில் முனைவோர் மாநாட்டை பல நாடுகளில் நடத்திவந்தது. அதன் தொடர்ச்சியாக அமெரிக்கத் தமிழர்களையும், தமிழ்நாட்டு தமிழர்களையும் ஒன்றிணைக்கும் நோக்குடன் இந்த ஆண்டு (2026) சனவரி 17-ஆம் நாள் கோவை மாநகரில் நடைபெற்ற மாநாடு சீரும் சிறப்புமாக நடந்தேறியதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடம் தெரிவு செய்தல் தொடங்கி சிறப்பு விருந்தினர்களின் பட்டியல் தயாரித்தல், ஒலி, ஒளி, அரங்கு அனைத்தையும் நிகழ்ச்சி மேலாண்மைக் குழுவுடன் சேர்ந்து வடிவமைத்தல், சிறப்பான நிதி மேலாண்மை, நிகழ்ச்சி சார்ந்த அத்துணை தகவல்களையும் உடனுக்குடன் மக்களிடம் கொண்டு சேர்த்தல் எனப் பல்வேறு தளங்களில் பேரவை நிர்வாகக் குழு உறுப்பினர்களும், FiTEN ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் குழு உறுப்பினர்களும் இடையறாது உழைத்தனர். அவர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே.ஈ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் ந. பழனிசாமி, முன்னாள் அமைச்சர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினருமான திரு. எஸ்.பி. வேலுமணி, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் (கோவை தெற்கு) திருமதி வானதி சீனிவாசன், ராம்ராஜ் காட்டன் நிறுவனர் மற்றும் தலைவர் திரு. கே.ஆர். நாகராஜன், URC Construction Pvt Ltd ., நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சி. தேவராஜன், PGP குழுமத்தின் தலைவர் டாக்டர் பழனி ஜி. பெரியசாமி, மிசௌரி மாகாணத்தின் மேயர் ஸ்டீபன் மனோஜ் தாம்சன், திருமிகு சுபத்ரா மயில்சாமி, திருமிகு கவிதா ராமசாமி, ஜெம் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் டாக்டர் சி. பழனிவேலு எனப் பல்வேறு ஆளுமைகள் கலந்துகொண்டு மாநாட்டை சிறப்பித்தனர்.

தற்கால சூழலுக்கேற்ற, பல்வேறு நிலைகளுக்குமான துறைசார் வல்லுநர்கள் பங்குபெற்ற கலந்துரையாடல்கள், தொழில் முனைவோருக்கான போட்டிகள், தொழில் துறையில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களுக்கு FiTEN சிறப்பு விருதுகள் என அனைத்தும் மன நிறைவாகவும், மகிழ்ச்சியாகவும் அமைந்தன.

பேரவை நிர்வாக உறுப்பினர்கள், FiTEN குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்களின் அயராத உழைப்பு இம்மாநாட்டை சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் மட்டுமல்ல; வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகவும் அமைந்தது என்றால் அது மிகையாகாது. இதன் பின் நின்று உழைத்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தமிழிசை விழா

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் இசைக்கடல் பண்பாட்டு அறக்கட்டளையும் இணைந்து நடத்திய தமிழிசை விழாவின் 13-ஆவது ஆண்டு விழா, கடந்த ஆண்டு (2025) டிசம்பர் 29-ஆம் நாள் சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. துணைச்செயலாளர் திருமிகு ஜான்சிராணி பிரபாகரன், தகவல் தொடர்புக்குழுவிலிருந்து திரு. கொழந்தவேல் இராமசாமி, தமிழிசைக் குழுத் தலைவர் திரு. பாபு விநாயகம், பொருளாளர் வள்ளிக்கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர். மேலும் இசை ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நெஞ்சை அள்ளும் வண்ணமாக இருந்தது. தமிழிசையின் மேன்மையை எடுத்துரைக்கும் பொருட்டு பேரவை சார்பில் நடத்திய இவ்விழா இசை அன்பர்களுக்கு ஒரு இனிய நிகழ்வாகவே அமைந்தது. ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், திரு. வை. குமார், திரு. கிருஷ்ணசாமி வாண்டையார், திரு. சைதை சா. துரைசாமி, திரு. தஞ்சாவூர் கவிராயர், திருபுவனம் ஆத்மநாதன் ஐயா இன்னும் இசை ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மரபுக் கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், குறிப்பாக குழந்தைகளின் நிகழ்ச்சிகள் காண்போரை இசைக் கடலில் திளைக்கச் செய்தது. புகழ்பெற்ற பறையிசை கலைஞர் பத்மஸ்ரீ வேலு ஆசான் குழுவின் பறை முழக்கத்தில் அரங்கமே அதிர்ந்தது.

## அயலகத் தமிழர் நாள் விழா

தமிழர்களின் உலகளாவிய தாக்கத்தைப் போற்றும் விதமாகவும், அவர்களின் பங்களிப்பை சிறப்பிக்கும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு சார்பில் நடத்தப்படும் அயலகத் தமிழர் நாள் விழா இந்த ஆண்டு (2026) சனவரி 11, 12 ஆகிய நாள்களில் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு நாடுகளின் அரசு மற்றும் மக்கள் பிரதிநிதிகள், உலகெங்கும் உள்ள சாதனைத் தமிழர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு. கனிமொழி கருணாநிதி, அமைச்சர் திரு. துரைமுருகன் இன்னும் பல அமைச்சர்கள் மற்றும் ஆளுமைகள் கலந்துகொண்டு புலம் பெயர் தமிழர்களின் நல்வாழ்வு, முன்னேற்றம், அவற்றுக்கான திட்டங்கள் என பல கோணங்களில் உரையாற்றியது மிகச் சிறப்பாகவும், நம்பிக்கையாகவும் இருந்தது.

நம் பேரவையின் செயல்களைப் பாராட்டும் விதமாகவும், சிறப்பிக்கும் விதமாகவும் கேடயம் வழங்கி சிறப்பு செய்யப்பட்டதை பகிர்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பேரவை சார்பில் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த சாவடியில் தமிழ்நாடு மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்தும் மக்கள் ஆவலுடன் வந்து, பார்த்து, கலந்துரையாடி, தகவல்களைப் பெற்று சென்றனர். இது நம் பேரவைக்கும், பல நாட்டு தமிழ்ச்சங்கங்களுக்கும் நல்ல உறவை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஆண்டு சூலைத் திங்கள் 2,3,4 ஆகிய நாள்களில் நியூ செர்சி மாகாணத்தில் நடைபெறவிருக்கும் நம் பேரவையின் 39-ஆவது விழாவிற்கான வேலைகளும், போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளும் தொடங்கியுள்ளன. இதுவரை நீங்கள் அளித்துவரும் அன்பிற்கும் ஆதரவிற்கும் நன்றி!

இதேபோல் உங்கள் ஆதரவை தொடர்ந்து நல்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தனித்து நின்று வெல்லும் தமிழ்!

**விஜய் மணிவேல்**

**தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.**

# பேரவைச் செயலாளர் மடல்

அன்புடையீர்,

வணக்கம்!

**“ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**

**தாழாது உஞற்று பவர்.”**

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நம் பேரவையின் ஒவ்வொரு குழுவும், ஒவ்வொரு தன்னார்வலரும் ஆற்றிவரும் அயராத உழைப்பை நெஞ்சார நினைவுகூர்ந்தபடி, அண்மைய இலையுதிர் காலத்திலிருந்து இவ்வருடத் தொடக்கம் வரை நம் பேரவை மற்றும் அதனுடன் இணைந்து இயங்கும் குழுக்கள் முன்னெடுத்த முக்கியச் செயல்பாடுகளைச் சுருக்கமாக இத்தருணத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## குழுத் தலைவர்கள் ஒருங்கிணைவு – 27 குழுக் கூட்டம்

தன்னார்வலர்களின் நேரத்தையும் உழைப்பையும் தொடர்ச்சியாக மதித்து வருகிற தலைமைக்குழு, அண்மையில் 27 குழுத் தலைவர்கள் இணைந்த விரிவான இணையவழிக் கூட்டத்தை முன்னெடுத்து சிறப்பாக நிறைவு செய்தது.

முன்னிரவு எட்டு மணிக்கு தொடங்கிய இந்தக் கூட்டம், இரண்டு மணிநேரம் இடைவிடாது நடைபெற்றது; ஒவ்வொரு குழுத் தலைவரும் தமது குழுவின் செயல்பாடுகள், எதிர்கொண்ட சவால்கள், வருங்காலத் திட்டங்கள் ஆகியவற்றை சீரிய முறையில் முன்வைத்தனர்.

இக்கூட்டத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சுருக்க அறிக்கைகள் மட்டுமல்லாமல், இனிவரும் மாதங்களில் நடைபெறவிருக்கும் பேரவை நிகழ்ச்சிகளுக்கான பணித்திட்டங்கள், நியூ ஜெர்சியில் நடைபெறவிருக்கும் 39–ஆவது பேரவைக் கூட்டம் மற்றும் விழாவுக்கான ஆரம்பக் கோவைகள், வருங்கால பேரவைக்கான கட்டமைப்பு மற்றும் நல்ல ஆட்சிக் கொள்கைகள் (good governance practices) ஆகியவை பற்றியும் ஆழ்ந்த விவாதங்கள் நடைபெற்றன.

குழுக்கள் ஒன்றையொன்று பற்றி மேலுமுணர்ந்து, பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிக்கும் வழிகள் குறித்து பல பயனுள்ள ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன; இதனால் பேரவையின் அளப்பரிய ஆற்றல் ஒரே மேடையில் மாமலையெனக் கண்ணுக்கு விழுந்தது என்பதில் ஐயமில்லை.

இந்த ஒருங்கிணைவு முயற்சியை முன்களத்தில் இருந்து வழிநடத்திய பேரவைத்தலைவர் திரு விஜய் மணிவேல் அவர்களுக்கும், துணைத் தலைவர் திரு எழிலன் இராமராஜன் அவர்களுக்கும், செயலாளர் குழு உறுப்பினர்களுக்கும், கலந்துக் கொண்ட அனைத்து குழுத் தலைவர்களுக்கும் பேரவை சார்பில் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்கள் மற்றும் உறுப்பினர் ஈடுபாடு

இரு வாரத்திற்கு ஒருமுறை நடைபெறும் செயற்குழுக் கூட்டங்களில், நடந்து கொண்டிருக்கும் அனைத்து செயல்பாடுகளும் விரிவாக விவாதிக்கப்பட்டு, அந்தக் கூட்டங்களின் குறிப்புகள் (Minutes of Meeting) பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இவ்வாறு இடைவிடாமல் தகவல் பகிர்ந்து வருவது, நம் பேரவையின் செயல்பாடுகள் குறித்து ஒவ்வொருவரும் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படைத்தன்மையும் நேர்மையும் கொண்ட நிர்வாகத்தை இந்தச் செயற்குழு உருவாக்கிக் காட்டுகிறது.

மேலும், காலாண்டு அடிப்படையில் பொதுக்குழுக் கூட்டங்கள் முறையாக நடைபெற்று வருவது, நம் பேரவையின் அமைப்புசார் வலிமையை வெளிப்படுத்தும் முக்கியச் சுட்டுக்காட்டாகும்.

Fall 2025 – Winter 2026 காலப்பகுதியில் இரண்டு காலாண்டுப் பொதுக்குழுக் கூட்டங்கள் தேவையான quorum–ஐ பூர்த்தி செய்து சிறப்பாக நடைபெற்றன; இந்தக் கூட்டங்களில் உறுப்பினர்கள் தீவிரமாகக் கலந்து கொண்டு கேள்விகளை எழுப்பியதும், கட்டுரையான ஆலோசனைகள் வழங்கியதும், நிர்வாகத்தின் திறந்த வெளிப்பாட்டை மேலும் வலுப்படுத்தியது.

செயலாளர் அறிக்கைகள், பொருளாளர் அறிக்கைகள், சங்கப் பதிவு மற்றும் உறுப்பினர் நிலை பற்றிய புதுப்பிப்புகள், நிலுவைப் பிரச்சினைகள் குறித்த முன்மொழிவுகள் ஆகியவை இந்தக் கூட்டங்களில் விவரமாக முன்வைக்கப்பட்டன.

வாக்குரிமை கொண்ட பிரதிநிதர்கள் தங்கள் பிரதேசத் தமிழ்ச்சங்க உறுப்பினர்களின் கேள்விகளை எடுத்துக் கொண்டு வந்து, ஒவ்வொரு தீர்மானமும் விரிவான விவாதங்களுக்குப் பின் எடுக்கப்படுவதை உறுதி செய்தது குறிப்பிடத்தக்கது.

இன்னும் தங்கள் பிரதிநிதிகள் (Delegates), சங்கத் தலைவர்கள் (President), செயலாளர்கள் (Secretary) விவரங்களில் மாற்றம் ஏற்பட்டும், பேரவையின் பதிவுகளில் புதுப்பிக்கப்படாமல் இருந்தால், தயவுசெய்து உடனடியாகத் தேவையான தகவல்களை அனுப்பி உங்கள் சங்க விவரங்களைப் புதுப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் விளக்கங்களுக்கும், தகவல் புதுப்பிப்புகளுக்கும், தயவுசெய்து secretary@fetna.org என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்பு கொள்ளலாம்.

### குழுக்கள், துணைக்குழுக்கள் – தொடர்ச்சியான சேவைச் செயற்பாடுகள்

நம் பேரவையின் உயிரும் உழைப்பு நரம்பும் தன்னார்வலர்களே; பல்வேறு துறைகளில் செயற்படும் குழுக்கள்தான் அந்த ஆற்றலை வடிவமைக்கும் கரங்களாக உள்ளன.

சமூக மற்றும் நிர்வாகப் பணி, கல்வி, கலாச்சாரம், ஊடகம், இளைஞர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி, தமிழ்க்கல்வி, இலக்கியம், ஊக்குவிப்பு திட்டங்கள் என முப்பதுக்கும் மேற்பட்ட குழுக்கள் ஒருங்கிணைந்த அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அன்புடைய நெஞ்சம் (Matrimonial Committee) குழு, அடுத்த தலைமுறைக்கான வாழ்வுத் துணையைத் தேடும் இளைஞர்கள் மற்றும் குடும்பங்களுக்கு பாதுகாப்பான, மதிப்புமிக்க ஒரு தளத்தை உருவாக்கும் நோக்கில் தொடர்ந்து முயற்சித்து வருகிறது; திருமணத் தொடர்பு விரும்புபவர்களுக்கு வழிகாட்டும் முகாம்கள், ஆலோசனைக் கூட்டங்கள் போன்றவற்றை இந்தக் குழு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறது.

தமிழ்ER குழு, வட அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் சமூகத்திற்குத் தேவையான அவசர உதவி, நெருக்கடி நேரத் தொடர்பு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு போன்ற துறைகளில் இடையறாத சேவையை வழங்கி வருகிறது.

தமிழ்க்கல்வி மேம்பாட்டுக் குழு, வட அமெரிக்கத் தமிழ் மாணவர்கள் மற்றும் இளையோர் மத்தியில் தமிழைக் கற்பிக்கும் முறைகளை புதுமையாக வடிவமைக்கிறது; ஆன்லைன் வகுப்புகள், பயிற்சி முகாம்கள், பாடத்திட்ட மேம்பாடு போன்ற தளங்களில் இந்தக் குழுவின் உழைப்பு பாராட்டத்தக்கதாக உள்ளது.

இலக்கியக் குழு தொடர்ந்து நடத்தும் இலக்கியக் கூட்டங்கள், எழுத்தாளருடன் உரையாடல்கள், தமிழ் படைப்புகளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிகள், நம் இளம் தலைமுறையின் வாசிப்பு பழக்கத்தையும் படைப்பாற்றலையும் ஊக்குவிக்கும் விதமாக அமைந்துள்ளன.

தகவல் தொடர்புக் குழு (PRO), செய்திமடல்கள், சமூக வலைத்தளப் பதிவுகள், இணையவழி அறிவிப்புகள் ஆகியவற்றின் மூலம் பேரவையின் ஒவ்வொரு செயற்பாடும் உறுப்பினர்களிடம் துல்லியமாகவும் தாமதமின்றியும் சென்றடைவதை உறுதி செய்கிறது.

சட்டம், குடியேற்றம் மற்றும் சமூக நலத் துறைகளில் ஆலோசனைகள் வழங்கும் குழுக்களும், தனிநபர் மற்றும் குடும்பங்களுக்குத் தேவையான முதற்நிலை வழிகாட்டுதலை அளித்து வருகின்றன.

குழுக்கள் தங்கள் செயற்பாடுகள் குறித்த அறிக்கைகள், புகைப்படங்கள், தன்னார்வலர்களின் பெயர்கள் போன்றவற்றைச் செயலாளர் அலுவலகத்துக்கு அனுப்பிவரும் நடைமுறை, ஒரு நல்ல வரலாற்றுச் சான்றாகவும், எதிர்காலத் திட்டமிடலுக்கான நம்பகத் தரவாகவும் மாறிக் கொண்டிருக்கிறது.

இன்னும் தங்கள் குழு உறுப்பினர்களின் புகைப்படங்கள் மற்றும் தமிழில் முழுப் பெயர்கள் உள்ளிட்ட விவரங்கள் அனுப்பாத குழுத் தலைவர்கள், முன்பே பகிரப்பட்ட கோப்புறை (folder) தொடர்பை பயன்படுத்தி அவற்றைப் பதிவேற்றுமாறும் அன்புடன் நினைவூட்டுகிறேன்.

### உறுப்பினர் வளர்ச்சி, கட்டமைப்பு மற்றும் நிதி முன்முயற்சிகள்

தற்போது வட அமெரிக்கா முழுவதும் 70-க்கும் மேற்பட்ட தமிழ்ச்சங்கங்கள் நம் பேரவையின் உறுப்புச் சங்கங்களாக இணைந்துள்ளன; அதில் செயலில் இருக்கும் சங்கங்கள், புதியதாக இணைந்த சங்கங்கள், இணைச் சங்கங்கள் (Associates) ஆகியவை சேர்ந்து பேரவையை உண்மையான "குடைச் சங்கம்" ஆக உருவாக்குகின்றன.

பேரவையின் பிரதிநிதித்துவ ஆளுமைக் கட்டமைப்பில் 250-க்கும் மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், பெரும்பான்மை பங்கைக் கொண்ட செயற்குழு, வாழ்நாள் உறுப்பினர்கள் என பல அடுக்குகள் மூலம் சிறந்த நிர்வாகச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பேரவைக்குள் இயங்கும் முப்பதுக்கும் மேற்பட்ட குழுக்களில் ஒவ்வொரு குழுவுக்கும் தனித் தலைவர், துறைத் தலைவர், ஆலோசகர்கள், மொத்தத்தில் பல நூறு தன்னார்வலர்கள் ஆண்டு முழுவதும் பல்வேறு திட்டங்களில் ஈடுபட்டிருப்பது, அண்மைய அறிக்கைகளில் தெளிவாகப் பதிவாகியுள்ளது.

அதேவேளை, மாணவர்களுக்கான நிதி உதவி அறக்கட்டளை (Endowment fund for students), வாழ்நாள் உறுப்பினர் நிலை மாற்றம் மற்றும் மீளமைவு, வரவிருக்கும் 39-ஆவது பேரவை விழாவின் நிதி திட்டம் போன்ற முக்கிய பிரதிநிதித் தீர்மானங்களும், சமீபத்திய கூட்டங்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

### முன்னோக்கி – உறுப்பினர்களிடம் வேண்டுகோள்

நம் பேரவை இன்று இந்த உயரத்தில் நிற்கச் செய்தது, உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ் மக்களின் நம்பிக்கையும், உங்கள் தொடர்ந்த பங்களிப்பும்தான்.


அதனை அடுத்த அடிக்கட்டுக்கு கொண்டு செல்ல,

- தங்கள் தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்குள் பேரவையின் நிகழ்ச்சிகள், அறிவிப்புகள், வாய்ப்புகள் அனைத்தையும் தொடர்ந்து பகிர்ந்து வரவும்.
- குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள், புதிதாகக் குடியேறும் குடும்பங்கள் ஆகியோரைக் குழு மற்றும் தன்னார்வப் பணிகளில் இணைத்துக் கொண்டு வர முயற்சி செய்யவும்.
- உங்கள் பரிந்துரைகள், கருத்துகள், கேள்விகள் அனைத்தையும் secretary@fetna.org-க்கு அனுப்பி, நிர்வாகத்துடன் தொடர்ச்சியான உரையாடலில் இணைந்திருங்கள்.

நின்று வெல்லும் தமிழ்! நெஞ்சில் நிலைக்கும் தமிழர் ஒன்றியம்!

நம் பேரவையின் வளர்ச்சிப் பாதையில் நீங்கள் அளிக்கும் அன்பும் ஆதரவும் தொடர்ந்து நிலைக்க அன்புடன் வேண்டுகிறேன்.

வரும் ஜூலை மாதம் நியூ ஜெர்சியில் நடைபெறவிருக்கும் 39-ஆவது பேரவைக் கூட்டம் மற்றும் விழாவில், உலகம் தழுவிய தமிழர்களுடன் இணைந்து தமிழையும் தமிழரையும் கொண்டாடும் இந்த மகிழ்வுப் பெருவிழாவிற்கு, உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் அன்போடு வரவேற்கிறேன்.




## முனைவர்
## கபிலன் வெள்ளையா

**செயலாளர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை (FeTNA)**

# வாழ்த்து மடல்

அன்பிற்கினிய வட அமெரிக்கத் தமிழ் உறவுகளே,

வணக்கம். இலையுதிர் காலம் முடிந்து பனிக்காலம் துவங்கிவிட்டாலே அமெரிக்கா முழுவதும் இருக்கின்ற நம்முடைய தமிழ்ச் சங்கங்கள் அமெரிக்க வாழ் தமிழ் உறவுகள் புடைச்சூழ பல்வேறு நிகழ்ச்சிகளை முன்னெடுக்க ஆயத்தமாகின்றன. அதன் அடிப்படையில் தீபாவளித் திருநாள், கிறிஸ்துமஸ் பெருவிழா, நன்றி நவிழும் நாள் கொண்டாட்டங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தரணியெங்கும் விரவி வாழும் தமிழர்களின் ஒப்பற்ற திருவிழாவான தைத்திருநாளாம் தமிழர் திருநாளை மிகச் சிறப்பாக கொண்டாடி இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நம்முடைய தாய்த்தமிழ் நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் நம்மை இது போன்ற விழாக்கள்தான் இணைக்கின்றன.

உறுப்பினர்கள் தாய்த்தமிழ் நாட்டிற்கு சென்று பல்வேறு நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டு பெரும் மகிழ்வுடன் அமெரிக்கா திரும்பி இருக்கிறார்கள். நம்முடைய பேரவைக்கு அருவி இதழ் குழு சார்பாக எங்கள் மனமார்ந்த நன்றியையும்,வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். நம்முடைய பேரவையின் சார்பாக சென்னையில் நடைபெற்ற தமிழிசை நிகழ்ச்சி போற்றுதலுக்குரியது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் தமிழ்நாடு அரசு நடத்தும் அயலகத் தமிழர் திருநாளில் நம்முடைய பேரவை மற்றும் பல்வேறு அமெரிக்கத் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கிறார்கள், அனைவருக்கும் வாழ்த்துகள்.



நம்முடைய பேரவை நடத்தும் முக்கிய நிகழ்வுகளில் பெரும் போற்றுதலுக்குரியது தொழில் முனைவோர் கூட்டமைப்பு(FiTEN) நிகழ்வு. கடந்த இரண்டு ஆண்டுகளில் நம்முடைய தாய்த்தமிழ் நாட்டில் அதிலும் குறிப்பாக புறநகர் மாவட்டங்களில் மிகச்சிறப்பாக முன்னெடுத்ததை வாழ்த்துவதில் பெருமை கொள்கிறோம். கடந்த ஆண்டு மதுரை மாநகரில் மிக பிரம்மாண்டமாக தொழில் முனைவோர் கூட்டமைப்பு நிகழ்வு நடந்தது. அதேபோல இந்த வருடம் மிக நேர்த்தியான திட்டமிடலுடன் மிகச் சிறப்பான முறையில் கோவை மாநகரில்

தொழில் முனைவோர் கூட்டமைப்பு பெருந்திரள் கூட்டத்தின் பெரும் வரவேற்புடன் மிகச் சிறப்பாக நடந்தேறியிருக்கிறது. அருவி இதழ் குழுவின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்காலாண்டு இதழில் நினைவில் கொள்ள வேண்டிய மிக முக்கிய நிகழ்வு நம் தாய் மொழியாம் தமிழை காக்க ஆதிக்கம் எந்த வழியில் வந்தாலும் அதை எதிர்ப்பதில் என்றைக்கும் தன் நிலை தவறாத வீரத் தமிழர்களாம் திரு. நடராசன், திரு. தாளமுத்து, கீழப்பழுவூர் திரு. சின்னச்சாமி, கோடம்பாக்கம் திரு. சிவலிங்கம், விருகம்பாக்கம் ஏ. அரங்கநாதன், சிவகங்கை திரு. இராசேந்திரன், கீரனூர் முத்து, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன்,விராலிமலை சண்முகம், கோவை பீளமேடு தண்டபாணி, மாயவரம் சாரங்கபாணி போன்ற மொழிப்போர் தியாகிகளின் தியாகத்தை என்றும் நினைவில் ஏந்துவோம். அவர்களின் தியாகத்தை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்ப்பதில் தவறாமல் இருப்போம் என்று உறுதிமொழி ஏற்போம் என அருவி இதழ்க் குழுவின் இப்பனிமலர் இதழில் பதிவு செய்கிறோம்.

அதேபோல இக்காலாண்டு இதழில் நினைவில் கொள்ள வேண்டிய இன்னொரு மகத்தான மனிதர் திருவாளர் பென்னிகுவிக் அவர்கள். அவர் பிறந்த ஜனவரி மாதத்தை உள்ளடக்கி வரும் இந்த இதழில் அவரின் பெருந்தொண்டினை நினைவில் கொள்ள வேண்டியவை தமிழர்களாகிய நம் அனைவரின் கடமை. அரபிக் கடலில் கலக்கும் முல்லைப் பெரியாறு நீர் வழித்தடத்தை கிழக்கு நோக்கி திருப்பி இன்றைக்கு தென் மாவட்டங்களில் ஏறக்குறைய 240000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு நீரினை வழங்க கூடிய அளவுக்கு மிகப்பெரிய அணையைக் கட்டிய அந்த மாமனிதரின் தொண்டினை தமிழ்நாடு ஒருபோதும் மறவாது. அதிலும் குறிப்பாக அன்றைய பிரிட்டிஷ் அரசு அணையை கட்டுவதற்கு போதுமான நிதியை ஒதுக்காத நிலையில், தன் நாட்டில் தனக்கு சொந்தமாக இருந்த சொத்தை விற்று அணையைக் கட்டிய மாபெரும் மனிதரை உலகில் நீர் உள்ளவரை, கார் உள்ளவரை கடைசி தமிழனும் மறக்க மாட்டான்.

பனிமலர் படைப்புகளை தந்த அனைத்து படைப்பாளிகளுக்கும், அட்டைப்பட ஓவியங்களை தந்த நம்ம ஊர் ஓவியர்களுக்கும், குறிப்பாக மருத்துவம் மற்றும் அறிவியல் சார்ந்த படைப்புகளை தந்த படைப்பாளிகளுக்கும் அருவி இதழின் சார்பாக வாழ்த்துகளையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம், அருவி குறித்த பின்னூட்டங்களை aruvimalar@fetna.org என்ற மின்னஞ்சல் முகவரியில் பகிர்ந்து கொள்ளுங்கள்.


## திருமலைஞானம் சிவஞானம்

**தமிழ்ச்சங்கம் மிச்சிகன்,**

**ரோசெஸ்டர் ஹில்ஸ், மிச்சிகன்**




# தொழில் நகரில் தொழில் முனைவோர் மாநாடு

**ந.இராமலெட்சுமி,**
**தகவல் தொடர்புக்குழுத் தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை**

வட அமெரிக்கா முழுவதும் உள்ள தமிழ் மக்களை ஒன்றிணைத்து மொழி, கலை, இலக்கியம், பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகளை இடையறாது நடத்திவரும் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை (FeTNA), அதன் அடுத்த கட்டமாக பன்னாட்டுத் தமிழர் தொழில் முனைவோர் மாநாட்டை பல நாடுகளில் நடத்திவந்தது. அதன் தொடர்ச்சியாக அமெரிக்கத் தமிழர்களையும், தமிழ்நாட்டு தமிழர்களையும் ஒன்றிணைக்கும் நோக்குடன் 3 வருடங்களாக தமிழ்நாட்டில் வெகுசிறப்பாக நடத்திவருகிறது.

இந்த ஆண்டு மாநாடு “தொழில் முனைவோம்! தொடர்ந்து வளர்வோம்!” என்ற முழக்கத்தோடு சனவரி 17 (2026) -ஆம் நாள் "தென்னகத்தின் மான்செஸ்டர்" எனும் சிறப்பைத் தன்னகத்தே கொண்ட கோவை மாநகரில், சீரும் சிறப்புமாக நடந்தேறியதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மதுரையில் வெகுசிறப்பாக






நடைபெற்று உலக முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்த மாநாடு, அதே நாளிலேயே தனது அடுத்த இடத்தை கோவை என முடிவுசெய்தது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்தே இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் தொடங்கின. இடம் தெரிவு செய்தல், சிறப்பு விருந்தினர்களின் பட்டியல் தயாரித்தல், பல்வேறு தளங்களில் செயல்படும் முக்கிய அமைச்சர்கள் மற்றும் ஆளுமைகளை அழைத்துப்பேசி அவர்களின் நேரம் திட்டமிடல், பல்வேறு துறை சார்ந்த ஆளுமைகளைப் பட்டியலிட்டு அவர்களின் கலந்துரையாடல் நேரத்தை முடிவு செய்தல், நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தல், ஒலி, ஒளி, அரங்கு அனைத்தையும் நிகழ்ச்சி மேலாண்மைக் குழுவுடன் சேர்ந்து வடிவமைத்தல், சேலம், திருச்சி, கோவை எனப் பல்வேறு மாவட்டங்களில் நிகழ்ச்சி முன்னோட்டங்கள் நடத்துதல், வருகைப் பதிவை சரிசெய்தல், சிறப்பான நிதி மேலாண்மை, நிகழ்ச்சி சார்ந்த அத்துணை தகவல்களையும் உடனுக்குடன் மக்களிடம் கொண்டு சேர்த்தல் எனப் பல்வேறு தளங்களில் பேரவை நிர்வாகக் குழு உறுப்பினர்களும், *FiTEN* ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் குழு உறுப்பினர்களும் இடையறாது உழைத்தனர்.






தொடக்கத்தில் சிறிது தொய்வுடன் ஆரம்பித்த நுழைவு பதிவு, பின் நாள்களில் முற்றிலும் விற்று தீர்ந்தது. அதிலும் மாணவர்களுக்கான நுழைவு சீட்டுகள் முதலில் முடிந்தது இளைஞர்களின் ஆர்வத்தைப் பெரிதும் காட்டியது. கொடையாளிகள், புரவலர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பொருளுதவியும், பங்களிப்பும் இந்த நிகழ்ச்சியின் வேகத்தை இருமடங்காக்கியது.

மாநாடு தமிழ்த்தாய் வாழ்த்து, மாண்புடன் ஒலிக்கப்பெற்று, பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், மாண்புமிகு ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே.ஈ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் ந. பழனிசாமி, பேரவைத் தலைவர் விஜய்


















மணிவேல், பொருளாளர் வள்ளிக்கண்ணன் மருதப்பன், துணைச்செயலாளர் ஜான்சிராணி பிரபாகரன், *FiTEN* ஒருங்கிணைப்பாளர் திரு சின்னசாமி பாப்பனன் துணை ஒருங்கிணைப்பாளர் திருமிகு சாந்தி தங்கராசு, கோபி ராமசாமி, மற்றும் பேரவை நிர்வாக உறுப்பினர்கள் சண்முகசுந்தரம் குத்தாலிங்கம், வெற்றிவேல் பெரியையா, பாரதி பாண்டி, தகவல் தொடர்புக்குழு தலைவர் திருமிகு இராமலெட்சுமி நடராசன் என அன்பர்கள் புடைசூழ குத்துவிளக்கேற்றி இனிதே தொடங்கியது.

பேரவைத்தலைவரின் தலைமையுரையில், சிறப்பு விருந்தினர்களை வரவேற்றதுடன் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் செயற்பாடுகள் (*FeTNA*) பற்றியும் *FiTEN* மாநாட்டின் பயன்கள் பற்றியும் எடுத்துரைத்தார். பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் வாழ்த்துரை வழங்கி மாநாட்டு நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே.ஈ.பிரகாஷ் அவர்கள் வழங்கிய சிறப்புரையில் பேரவையின் இந்த சிறப்பான முன்னெடுப்பை பாராட்டியதுடன் தமிழர்களின் பலத்தையும், ஆற்றல் மிக்க இளைஞர்கள் கொண்டு தமிழ்நாட்டை எப்படி உலக அரங்கில் உயர்த்தலாம் என்றும் பல்வேறு சுவாரசியமான தகவல்களைப் பகிர்ந்துகொண்டார்.

முன்னாள் அமைச்சர் பொங்கலூர் ந. பழனிசாமி, முன்னாள் அமைச்சர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினருமான திரு. எஸ்.பி. வேலுமணி, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் (கோவை தெற்கு) திருமதி வானதி சீனிவாசன், ராம்ராஜ் காட்டன் நிறுவனர் மற்றும் தலைவர் திரு. கே.ஆர். நாகராஜன், *URC Construction Pvt Ltd* ., நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சி. தேவராஜன், *PGP* குழுமத்தின் தலைவர் டாக்டர் பழனி ஜி. பெரியசாமி, மிசௌரி மாகாணத்தின் மேயர் ஸ்டீபன் மனோஜ் தாம்சன், ஜெம் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் டாக்டர் சி. பழனிவேலு, திருமிகு. சுபத்ரா மயில்சாமி, திருமிகு கவிதா ராமசாமி எனப் பல்வேறு சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். கடின உழைப்பு மற்றும் கடந்து வந்த பாதையும், வெற்றிக்கான வாழ்வியல் அனுபவங்களும் நிறைந்திருந்த அவர்களின் உரை அங்கிருந்த இளைஞர்களுக்கு மட்டுமல்ல , அனைவருக்குமே உத்வேகமாக அமைந்தது. மேலும் பேரவையின் மேனாள் தலைவர்களான திரு. கால்டுவெல் வேள்நம்பி, டாக்டர் முத்துவேல் செல்லையா இணைந்து சிறப்பித்தது கூடுதல் மகிழ்ச்சியளித்தது.

செயற்கை நுண்ணறிவு, வட அமெரிக்க குடியுரிமை, வேலைக்கான நுழைவுரிமை, கல்வித்துறை, நிர்வாகம் மற்றும் தொழில் துறை , நிலையான வாழ்வியலின் கூறுகள், சுகாதாரம் மற்றும் மருந்துத் துறை என தற்கால சூழலுக்கேற்ற கலந்துரையாடல்களில்









தொழில் துறையின் பல்வேறு நிலைகளுக்குமான துறைசார் வல்லுநர்கள் கலந்துகொண்டு தத்தம் கருத்துக்களை அழகுடனும், பயனுள்ளதாகவும் பகிர்ந்து கொண்டனர். மேலும் புத்தாக்க ஆர்வலர்கள் - தொழில் முனைவோருக்கான போட்டிகள் நடத்தப்பட்டு, வென்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. மேலும் தொழில் துறையில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்களுக்கு FiTEN சிறப்பு விருதுகளும் வழங்கப்பட்டன.




லீ மெரிடியன் எனும் 5 நட்சத்திர விடுதியின் பிரமாண்ட அரங்கு, அமைச்சர்கள் மற்றும் ஆளுமைகளின் கருத்துகள் செறிந்திருந்த உரை, பார்த்துப் பார்த்து தேர்ந்தெடுக்கப்பட்ட மதிய உணவு மற்றும் வெளிஅரங்கில் பிரமாண்டமான இரவு உணவு என அனைவரின் உள்ளம் மகிழ, கனவுகளுக்கான வெளியையும், அதை நனவாக்கும் வழியையும் ஏற்படுத்தி தந்ததே இம்மாநாட்டின் வெற்றி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை எங்களுக்கு.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆளுமைகள் அனைவரையும் மேடையில் சிறப்பு செய்தது. இம்மாநாட்டிற்காக பின்னின்று உழைத்த அனைத்து தன்னார்வலர்களையும் பாராட்டி அவர்களின் உழைப்பை சிறப்பிக்கும் விதமாக கேடயம் வழங்கப்பட்டது. நன்றியுரை நவிலும் வரையும் அரங்கு முழுதும் நிரம்பி இருந்த ஆர்வலர்கள், முந்தய நாளில் இருந்து உறக்கமின்றி உழைத்த இளம் தன்னார்வலர்கள் மற்றும் பேரவை உறுப்பினர்களின் அயராத உழைப்பு எனப் பல்வேறு காரணிகள் ஒன்றிணைந்து செயல்பட்டு இம்மாநாட்டை சிறப்பான, வெற்றிகரமான மாநாடாக மட்டுமல்ல, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை வரலாற்றில் ஒரு மைல் கல்லாகவும் பதித்தது என்பதை பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறோம்!



# ஹைக்கு கவிதைகள்



அருவியில்
நண்பர்களோடு பரிசலில் பயணம்
சேர்ந்து சுற்றியது நீர்

---

தொட்டு தொட்டு விளையாடியது
கடலில்
சிறுமீன்கள் நிலவின் நிழலை

---

கிரகப்பிரவேசம்
அழையா விருந்தாளி
குடும்பத்துடன் எறும்புகள்.

---

பொருந்தா சட்டையை
கழட்டியவுடன்
கூட்டுப்புழு பட்டாம்பூச்சியானது

---

இலைகள் உதிர்ந்த கிளை
சூடிக்கொண்டது
பௌர்ணமி நிலவை

---

வானிலும் கடலிலும்
ஒத்தசைவில் பயணம்
நிலவும் அதன் நிழலும்

---



நெடுஞ்சாலையில் பலூன்களோடு
குழந்தை தொழிலாளி
ஏக்கத்தோடு வாகனத்தில் மகள்

---

கோயில் வாசல்
பட்டினியில் பிச்சைக்காரக் கூட்டம்
மடத்தில் அன்னதானம்

---

மரக்கிளைகள் ஊடே
எட்டிப் பார்த்தது
வானம் நிலத்தை

---

ரோஜா செடி
சிலிர்த்துக் கொண்டது வெட்கத்தில்
மகள் தொட்டவுடன்

---



**திருமதி.சாந்தி சரவணன்**
**சென்னை**



# ஊழ்
# பற்றிய உலக சிந்தனை

அமோர் பாட்டி(Amor Fati) என்ற இலத்தீன மொழி சொல் “Love your Fate” என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரெடெரிக் நீட்ஷே என்ற ஜெர்மனிய மெய்யியலாளர் தி கே சயன்ஸ் (The Gay Science)மற்றும் எக்கே ஹோமோ(Ecco Homo) என்னும் நூல்களில் இந்த சொல்லை, வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளையும் அத்தன்மையிலேயே இன்முகத்தோடு ஏற்றுகொள்ளுதல்(Embrace Everthing,- Say Yes to life) என்று விளக்கியிருப்பார். தன் வாழ்விற்கான காரணம்(purpose) புரிந்த மனிதன் இடர்களனைத்திலும் வெற்றி காண்பான் என்பதே அவரின் அடிப்படை தத்துவம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட உறுதிப்பாட்டுவாதம் (Stoicism) என்ற கிரேக்க மெய்யியல் தத்துவமும் இதையே வலியுறுத்துகிறது. இதன் முக்கிய சிந்தனையாளர்களான சீனோ,செனெகா ,எபிக்டீடஸ் மற்றும் மார்கஸ் அவ்ரேலியஸ் போன்றோர், நம்மால் கட்டுப்படுத்த முடியாதவற்றை அமைதியாக ஏற்றுக்கொண்டு, நம்மால் கட்டுப்படுத்தக்கூடியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் மன அமைதியும் மகிழ்ச்சியும் பெறமுடியும் என்று தத்தம் வாழ்வில் எதிர்கொண்ட கடினமான சூழ்நிலைகளில் கற்ற படிப்பினைகளை பேரறிவாக (wisdom) தொகுத்துள்ளனர்.

இத்தத்துவத்தில் “விதி” (Logos) என்ற கோட்பாடு பிரபஞ்சத்தில் நடக்கும் அனைத்தும் இயற்கையின் ஒழுங்கான காரண- விளைவுத் தொடர் மூலம் நிர்ணயிக்கப்பட்டு நடைபெறுகிறது என்றும், இந்த இயற்கை முறைமையை புரிந்து நாம் உயரிய நோக்கத்தோடு அறிவுத்திறன் மற்றும் நற்பண்புகள் கொண்டு நம்மால் இயன்றவற்றை அறத்தின் வழி நின்று செய்ய வேண்டும் என்பதுதான். அட! இதை எங்கோ கேட்டதுபோல் உள்ளதே என்று எண்ணுபவர்களுக்கு வள்ளுவம் தொடாத சிந்தனை சிகரமும் உண்டோ என்பது தான் விடை.

வள்ளுவர் “ஊழினும் பெருவலி யாவுள” என்று வினவும் பொழுது, உலகத்தில் ஒரு இயற்கை ஒழுங்கு (Rational order) நிலவுவதை நன்கு உணர்கிறார் . இயற்கையின் படைப்பில் ஒரு முறையான ஆட்சி இருந்து வருவதையும் அதில் ஒரு சிறிய அங்கமாகிய மனிதன் அவன் புரிதலுக்கு அப்பாற்பட்டு பல விடயங்கள் நடப்பதை அறிந்து அறத்தின் வழி நடக்க பெருமுயற்சி எடுக்க வேண்டும் என்பதற்காகவே ஊழை வலியதாக காட்டியிருக்கிறார், தவிர அதை வினைப் பயனாகக் கருதவில்லை என்று உரையாசிரியர்கள் வாதிடுகின்றனர்.

“நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்

அல்லற் படுவ தெவன்” என்று அவர் வினா எழுப்பும் பொழுது அனைத்தையும் அத்தன்மையிலே ஏற்றுக்கொள்ள மனதை பழக வேண்டும் என்பது மறைபொருள்.

மேற்கத்திய சிந்தனை போன்றே கிழக்கின் தாவோயிசம்(Daoism) மரபிலும் விதி(Dao) என்பது இயற்கையின் வழி அல்லது பாதை என்றும் மனிதன் தனது எளிமையனை செயலற்ற செயல்(Wu-Wei Effortless action) எனும் கொள்கையை பின்பற்றி இயற்கையின் ஓட்டத்தோடு இணைந்து பயணித்தால் அமைதியான வாழ்வை பெற முடியும் என்று வலியுறுத்தப்படுகிறான்.

இதே கருத்தை கணியன் பூங்குன்றனாரும் "நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர் முறைவழிப் படூஉம்" என்று பாடும் பொழுது, ஆற்றின் வழியே போகும் மிதவைப் போல் மனித உயிரும் அனைத்தினும் வல்லதாய் விளங்கும்’முறை’ வழியாகவே பயணிக்கிறது



என்ற இயற்கை முறைமை எடுத்தியம்பு கிறார். சீனாவில் கன்பியூசியஸ் தோற்று வித்த மரபிலும் விதி(Ming) என்ற கோட்பாடு வலியது என்பதை ஒப்புக் கொண்டாலும் அறம், நல்லொழுக்கம் மற்றும் நன்னடத்தை சார்ந்து மனிதர்களுக்கிடையே ஒற்றுமை வளர்த்து சமூகத்தில் பொறுப்புடன் வாழ வழிநடத்துவதே அத்தத்துவத்தின் முதன்மை குறிக்கோள்.

வள்ளுவம் இத்தத்துவங்களில் எங்கே தனித்து விளங்குகின்றது என்றால் ஊழின் காரணமாக நம் சூழல் நமக்கு எதிராக அமைந்தாலும் முயற்சி எல்லாவற்றிக்கும் மேலான வல்லமை பொருந்தியது என்று ஆள்வினையுடைமையில் மனித முயற்சியை உச்சாணி கொம்பில் ஏற்றுகிறார்.



ராஷ்மி ராமலிங்கம்,
GATS

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி

என்ற இந்த அதிகாரத்தில் வரும் குறளனைத்தும் ஊழியின் வலிமை பெரிதென்பதை உணர்ந்து அதற்கும் பன்மடங்கு பெருமை தரும் முயற்சியை மேற்கொண்டால் ஊழையும் உப்பக்கம் காண முடியும் என்றுரைக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய இருத்தலியம்(Existentialism) என்ற தத்துவத்தில் முன்தோன்றிய ஊழ் /விதி கோட்பாடுகளை மறுத்து இயற்கை ஒழுங்கு என்ற ஒன்று நிலவுவதே இல்லை,உலகம் இயல்பாகவே அர்த்தமற்றதாக (absurd) இருக்கிறது என்ற மையக்கருத்தை முன்வைக்கின்றனர் அதன் சிந்தனையாளர்கள் .ஜீன்-பால் சார்த்ரே, ஆல்பர்ட் காமுஸ் போன்ற மெய்யறிவாளர்கள் மனிதன் தனது சுதந்திரமான தேர்வு கள் மூலம் தனது வாழ்க்கைக்கான அர்த்தத்தை(purpose) உருவாக்க முடியும் என்றுணர்த்துகிறார்கள்.

சிந்தனையாளர்கள் ஊழை பற்றிய நம்பிக்கையோ அவநம்பிக்கையோ கொண்டிருந்ததாலும் அனைவரும் ஓர் கருத்தில் ஒன்றுபட்டு காணப் படுகின்றனர்.உலக பேராற்றலுக்கு ஊன்றுகோலாக அமைவது மனித முயற்சியே என்பது தான். ஜென் மற்றும் ஸ்டோயிக் சிந்தனைகளில் மனிதனுக்கு வரும் இடர்பாடுகளே அவன் வளர்ச்சியாக மாறுகின்றன(Obstacle is the way) என்ற ஆழ்ந்த கருத்தை வலியுறுத்துகின்றன.

வள்ளுவரோ இடுக்கண் பற்றி அஞ்சாதவர் "இடும்பைக்கு இடும்பை படுப்பர்" என்கிறார்.கடினமான சூழலை சிரித்துக்கொண்டே கையாளத்தெரிந்தவர், துன்பம் மென்மேலும் அடுக்கி வந்தாலும் அவரின் மனதிட்பம் கண்டு அதுவாகவே துன்பப்பட்டு விலகும் என்ற முத்தான சிந்தனை எக்காலத்திற்கும் அருமருந்து.

தவிர்க்க முடியாத துயரத்தில் அர்த்தத்தை கண்டுபிடிப்பதே வாழ்க்கையின் நோக்கம் என்றுரைக்கிறது லோகோதெரபி என்ற உளவியல் கலை. விக்டர் பிராங்கல் என்ற மனநல மருத்துவர் வாழ்வின் நோக்கம்(Man's search for Meaning) என்ற நூலில் தனது ஹோலோகாஸ்ட் அனுபவத்தை உருக்கமாக பதிவிட்டு இக்கலையை விளக்கியிருப்பார். மாற்ற முடியாத சூழ்நிலைகளில் கூட, மனிதனுக்கு தனது மனப்பாங்கைத்(attitude) தேர்வு செய்யும் சுதந்திரம் உள்ளதென்பதே அவரது முக்கியக் கருத்து.

பன்னெடுங்காலமாக உலக சிந்தனையாளர்கள் வெவ்வேறு தத்துவங்கள் மற்றும் கோட்பாடுகள் பகிர்ந்திருந்தாலும் அனைவரும் ஓர் முற்றுப்புள்ளியில் சென்றிணைகின்றனர். ஒரு மனிதன் தன் மனப்பாங்கையும் முயற்சியையும் பேராயுதமாகக் கொண்டு இடர்களை தகர்த்து தன் எண்ணம் போல் வாழ்வை மாற்றியமைக்க முடியும் என்பதுதான். இந்த ரகசியத்தை புரிந்தவர்கள் அனைவரும் தத்தம் வாழ்வின் இரசவாதிகளே!!!!







# தாயுமானவர்கள்

கலாவும் ராமனும் வசதியற்ற குடும்பத்தில் பிறந்தவர்கள். இருவருக்கும் பெற்றோர்கள் பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். அவர்கள் தங்கள் திருமண வாழ்க்கையை மிக இனிதாகத் தொடங்கினார்கள். கலா ஒரு துணிக்கடையில் மேலாளராகப் பணியாற்றி வந்தாள். ராமன் ஒரு மளிகைக்கடை நடத்தி வந்தார். திருமணம் ஆன பத்து வருடங்கள் எப்படி உருண்டோடியது என்றே தெரியாமல் சென்றுவிட்டது. ஆனால் அவர்களுக்கு குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லை.




**இந்துமதி ஜெயபால்**

டப்ளின்


கலாவும் ராமனும் தங்கள் சக்திக்கு உட்பட்ட மருத்துவ முறைகளைச் செய்து பார்த்தார்கள். ஆனால் எந்தப் பயனும் இல்லை. இறுதியாக, ஒரு குழந்தையைத் தத்தெடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள். திருச்சியில் வசித்த அவர்கள், சாரதா அனாதை நிலையத்திற்கு சென்று குழந்தைகளைப் பார்த்து வர ஒரு நாள் சென்றார்கள்.

அந்த இடத்தில் கால் வைத்ததுமே, “இங்கு நமக்கு கட்டாயம் மழலைச் செல்வம் கிடைக்கும்” என்ற நம்பிக்கையுடன் ராமன் மகிழ்ச்சியில் இருந்தான். கலாவுக்கும் அந்த இடமே, “இங்குதான் நம்ம வாழ்க்கை முழுமை பெறப் போகுது” என்ற உணர்வைத் தந்தது.

அந்த நிலையத்தின் தலைவி ராதா, பிறந்து சில மாதங்களே ஆன குழந்தைகள் இருக்கும் அறைக்கு அவர்களை அழைத்துச் சென்றார். அந்த அறையில் பல சிறு குழந்தைகள் இருந்தன. அதில் முதலாவதாக இருந்த தொட்டிலில் ஒரு சிறிய பெண் குழந்தையை இருவரும் கவனித்தார்கள். கலா அந்தக் குழந்தையைத் தனது கைகளில் எடுத்தாள். அவள் கையில் எடுத்ததும், அந்தக் குழந்தை அவர்களைப் பார்த்து சிரித்தது. அந்த நிமிடமே கலாவும் ராமனும் ஒருமனதாக, அந்தக் குழந்தையைத்தான் தங்கள் குழந்தையாக முடிவு செய்தார்கள்.

அந்தக் குழந்தையின் சிரிப்பில், கடந்த பத்து ஆண்டுகளாக அவர்கள் எதிர்நோக்கிய ஆசை, பிரார்த்தனை எல்லாம் ஒன்றாகக் கண்ணுக்குத் தெரிந்தது போல அவர்களின் இதயங்களை நனைத்தது.

ராதாவிடம் அந்தக் குழந்தையைப் பற்றிய விவரங்களை கேட்டார்கள்.

“இந்தக் குழந்தை பிறந்து மூன்று மாதங்கள்தான் ஆகுது. அவளுடைய தாய், பிறப்புக்குப் பிறகு உயிரிழந்தார். எந்த உறவினரும் இதுவரை வந்து காணவில்லை,” என்று ராதா கூறினார்.

கலா, கண்களில் கண்ணீருடன் ராமனைப் பார்த்து,

“நாம்தான் இந்தக் குழந்தைக்கு தாயும் தந்தையுமாக இருக்கணும்,” என்றாள்.

தகுந்த சட்ட முறைகளைப் பின்பற்றி, தேவையான

ஆவணங்களைத் தயாரித்து, சில வாரங்களில் அந்தக் குழந்தையை வீட்டிற்கு அழைத்துவந்தார்கள். அவளுக்கு மாயா என்று பெயர் வைத்தார்கள்.

மாயா வந்த நாளிலிருந்து அந்த வீடு ஒரு வண்ணமயமான பூங்காவாக மாறிவிட்டது. இருவரும் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்தையும் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கினார்கள்.

மாயா வளர வளர, அவள் கண்களில் கலாவின் பார்வையும், அவள் சிரிப்பில் ராமனின் குழந்தைத் தனமும் ஒளிந்திருந்தது. அவர்கள் பெற்ற குழந்தையாக இல்லாவிட்டாலும், அந்தப் பாசத்தில் எந்தவித வித்தியாசமும் இல்லாமல் மாயா வளர்ந்தாள்.

ஆண்டுகள் உருண்டன.

மாயா பள்ளிக்குப் போன நாளில், கலா அவளுக்காக உணவு தயாரித்து வைத்தாள். ராமன் அவளுடன் வாசிப்பதற்காகப் புதிய புத்தகங்களை வாங்கிக் கொடுத்தான். இரவில் மூவரும் அவற்றைப் படித்தார்கள், சிரித்தார்கள், உற்சாகப்பட்டார்கள். மாயா அவர்களின் வாழ்க்கையை முழுமையாக்கிய பொக்கிஷமாக மாறினாள்.

ஒரு நாள், மாயா பள்ளியில் நடைபெற்ற ஒரு போட்டியில் முதலிடம் பெற்றாள். மேடையில் நின்று விருது வாங்கும்போது அவள் கூறினாள்:

**“என் அம்மாவும் அப்பாவும் என் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு.”**

அந்தச் சொற்கள் கலா மற்றும் ராமனின் கண்களில் கண்ணீரை வரவழைத்தன.

ஒரு சந்தர்ப்பத்தில், கலா, ராமன் மற்றும் மாயா ஒரு குடும்ப விழாவிற்கு சென்றனர். அங்கு சில உறவினர்கள், “தத்தெடுத்த குழந்தை தானே?” என்ற கேள்வியுடன் அவர்களை உலுக்கினார்கள்.

ஒருவர் கேட்டார்:

“உண்மையிலேயே தாயாகத் தோன்றுமா?”

அதற்கு கலா சுருக்கமாக, ஆனால் ஆழமாகப் பதிலளித்தாள்:

“மாயா என் ரத்தத்தில் பிறக்கவில்லை. ஆனால் என் உள்ளத்தில் வளர்ந்த குழந்தை. உண்மையான பாசம், உறவுகளைக் காட்டிலும் ஆழமானது.”

அந்த வார்த்தைகள்,



அவர்களின் உறவினர்களின் பார்வையையே மாற்றின.

மாயா பள்ளிக் கல்வியை முடித்து, சமூக சேவையைத் தேர்ந்தெடுத்தாள். தாயும் தந்தையும் அவளுக்குக் கொடுத்த அன்பை, பிற குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும் என்ற ஆசை அவளுக்குள் வளர்ந்தது.

சமூக சேவைத் துறையில் தேர்ச்சி பெற்று, ஏழை மற்றும் பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்காக அவள் பணியாற்றத் தொடங்கினாள். தனது சொந்த அனுபவத்தின் மூலம், குழந்தைகளின் மனங்களை அவள் நன்கு புரிந்துகொண்டாள்.

மாயா, தனது பெற்றோரின் வாழ்க்கையையே தனது உந்துசக்தியாக ஏற்று, சமூகத்தில் ஒரு ஒளிவிளக்காக மாறினாள்.

**“மாயா என் ரத்தத்தில் பிறக்கவில்லை. ஆனால் என் உள்ளத்தில் வளர்ந்த குழந்தை. உண்மையான பாசம், உறவுகளைக் காட்டிலும் ஆழமானது.”**

அவள் தனது பெற்றோரின் **25-வது கல்யாண நாளை முன்னிட்டு** ஒரு சிறப்பு விழாவை ஏற்பாடு செய்தாள். அந்த விழாவில் மேடையில் அவர்களை அழைத்து, அவள் கூறினாள்:

“எனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் நன்றாக இருப்பதற்குக் காரணம் என் அம்மா, என் அப்பா. அவர்கள் எனக்கு ‘தாய்’ என்றும் ‘தந்தை’ என்றும் சொல்லப்பட்ட காலம் போதும். அவர்கள் என் தாயுமானவர்கள். நானும் அவர்களைப் போல வாழ ஆசைப்படுகிறேன் ” என்று மாயா சொன்னாள்.

அந்த நிமிடம், கலா மற்றும் ராமனின் கண்களில் மீண்டும் கண்ணீர் வழிந்தது.

ஆனால் அது, இப்போது **ஒரு பூரணமான வாழ்க்கையின் சாட்சியாக** மாறிய கண்ணீராக இருந்தது.




















# விஸ்கான்சின் தமிழ்ச்சங்க நிகழ்வுகள்


விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம் ஒவ்வொரு விஸ்கான்சின் பல்கலைக்கழக தேர்வின் போதும் மாணவர்களுக்கு உறுப்பினர்கள் வீட்டில் தயார் செய்த உணவு வழங்குவது நடைமுறை. இந்த ஆண்டும் டிசம்பர் 13 அன்று மாணவர்களுக்கு உணவு வழங்கினோம். கடும் குளிரிலும் உற்சாகமாக மாணவர்கள் உணவை பெற்றுக்கொண்டனர். டிசம்பர் 14 அன்று பொதுக்குழு கூடி, ஆண்டு அறிக்கையும், செலவு விவரங்களையும் உறுப்பினர் முன் வைத்தது. புது செயற்குழு தேர்வுக்கான போட்டி நடைபெற்றது. புது செயற்குழு உறுப்பினர்களாக பின் வரும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தலைவராக கார்த்திக் வெங்கட்ராமன், துணைத்தலைவராக Dr. வெங்கடேஷ் பாலகிருஷ்ணன், செயலாளராக முஹம்மது பயஸ், இணைச்செயலாளராக ஜான்சிராணி பிரபாகரன், பொருளாளராக வசந்தி பிள்ளை, இணைப்பொருளாளராக நிர்மலா நரசிம்மன் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் செயற்குழு உறுப்பினர்களும் பொதுக்குழுவில் நியமிக்கப்பட்டனர். 2026-2027 செயற்குழு உறுப்பினர்களை வரவேற்கிறோம்.

விஸ்கான்சின் தமிழ் சங்கத்தின் பொங்கல் விழா ஜனவரி 31, 2026 அன்று மிகுந்த அரவணைப்புடனும், பண்டிகை உணர்வுடனும் கொண்டாடப்பட்டது, பாரம்பரியம், மற்றும் சமூக பிணைப்பு நிறைந்த ஒரு நாளில் குடும்பங்களையும் நண்பர் களையும் ஒன்றிணைத்தது. இந்த நிகழ்வு

பொங்கலின் சாரத்தை - நன்றியுணர்வு, ஒற்றுமை மற்றும் பகிர்வின் மகிழ்ச்சியை - அழகாக பிரதிபலித்தது.



Mr. Kaarthik Venkatraman
President


Dr. Venkatesh Balakrishnan
Vice President


Mr. Mohamed Foiaz
Secretary


Ms. Jansirani Prabakaran
Joint Secretary


Ms. Vasanthi Pillai
Treasurer


Ms. Nirmala Narasimhan
Joint Treasurer

இந்த பொங்கல் விழா கொண்டாட்டத்தில் அனைத்து வயதினருக்கும் ஏற்ற பல்வேறு வேடிக்கையான மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய செயல்பாடுகள் இடம்பெற்றன. வண்ணமயமான கோலவடிவமைப்புகள் துடிப்பான படைப்பாற்றலுடன் பங்கேற்பாளர்களை வரவேற்றன, அதே நேரத்தில் குழந்தைகள் குழந்தைகளின் வண்ணம் தீட்டுதல் மற்றும் ஓவிய போட்டியில் ஆர்வத்துடன் பங் கேற்றனர், பெருமையுடன் தங்கள் கலைப்படைப்புகளை வெளிப்படுத்தினர். அன்றைய தினத்திற்கு கூடுதல் உற்சாகத்தைச் சேர்த்து, உறியடி ஒரு துடிப்பான சிறப்பம் சமாக மாறியது - மகிழ்ச்சியான தருணங்கள் குழந்தைகளிடையே மகிழ்ச்சியான ஆற்றலைத் தூண்டி யது.




நிகழ்ச்சியின் சிறப்பு ஈர்ப்பாக பட்டிமன்றம் அமைந்தது, இது சிந்தனைமிக்க நகைச்சுவை மற்றும் உற்சாகமான விவாதத்தை மேடைக்குக் கொண்டு வந்தது. நகைச்சுவை கண்ணோட்டங்களால் நிரம்பிய நட்புரீதியான விவாதம், பார்வையாளர்களை ஈடுபாட்டு டனும், மகிழ்வுடனும் வைத்திருந்தது

பொங்கல் விழா ஒரு மகத்தான வெற்றியாக அமைந்தது - கலாச்சார பெருமை, குடும்ப நட்பு, வேடிக்கை மற்றும் அர்த்தமுள்ள இணைப்பு ஆகியவற்றின் ஒரு அற்புதமான நாளாக அமைந்தது. பொங்கல் விழா கொண்டாட்டத்தை உண்மையிலேயே சிறப்பானதாக்கிய ஆதரவும் உற்சாகமும் கொண்ட அனைத்து தன்னார்வலர்கள், பங்கேற்பாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கு விஸ்கான்சின் தமிழ் சங்கம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.




# மினசோட்டா தமிழ்ச்சங்கம்

மினசோட்டா தமிழ்ச்சங்கம், தமிழர் திருநாளான பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை, தொடர்ந்து 18 ஆண்டுகளாக சங்கமம் நிகழ்வாகக் கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறது. இந்நிகழ்ச்சி இந்த ஆண்டு பிப்ரவரி 1ஆம் நாள் 500க்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் மனதாரச் சுவைத்த பாரம்பரிய வாழையிலை விருந்துடன் கண் குளிரும் கலை விருந்தும் படைத்து வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

கடந்த 2024-ஆம் ஆண்டு முதல் சனவரி மாதத்தை "தமிழ் மொழி மரபுத்திங்கள்" என அறிவித்து மினசோட்டா மாநில அரசு நிறைவேற்றிய நிரந்தரத் தீர்மானத்தைத் தொடர்ந்து இக்கருப்பொருளின் பெருமையை அரங்கேற்றும் வகையில் இவ்வாண்டும் சங்கமம் சிறப்பாக நடத்தப்பட்டது.

மினசோட்டாவின் கடும் குளிரின் மத்தியிலும் பொங்கல் மகிழ்வொலி மாநிலம் முழுவதும் எதிரொலிக்கும் வகையில் இந்த விழா களைகட்டியது.

தமிழ்த் தாய் வாழ்த்தைத் தொடர்ந்து சங்கத்தின் தலைவர் திரு. செந்தில்குமார் கலியபெருமாள், இவ்வாண்டு துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட திருமதி ரேவதி ராஜு ஆகியோர் இணைந்து பாடலுடனும் கவிதையுடனும் மக்கள் அனைவரையும் வணங்கி வரவேற்று அமரச்செய்தனர்.

வரவேற்பு இசையானது,

விவசாயம், வயல்வெளியை மையப்படுத்திய துள்ளலான பாடலாக, வழக்கமான மிருதங்கம், நாதஸ்வரம் இசைகளைத் தவிர்த்து, இம்முறை மிகவும் தனித்துவமாக, நம் மரபு இசைக் கருவிகளான தவில், பறை, துடும்பு ஆகியவற்றின் இசையில் சங்கத்தின் இசைக்குழுவினரால் பாடப்பட்டு மக்களை உற்சாகப்படுத்தியது.

அடுத்ததாக மழலைச்செல்வங்கள் பங்கேற்ற “மலரும் மொட்டும்” எனும் மாறுவேட நிகழ்ச்சியில் குழந்தைகளின் மழலைத் தமிழ் கேட்டோர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது.

மினசோட்டா தமிழ்ச் சங்கத்தின் இசைக்குழு 20க்கும் மேற்பட்ட பாடகர்களுடன் இணைந்து மூன்று சிறப்பு பாடல்களைப் பாடினர். அதில் இரண்டு பாடல்கள் திரு. ஆத்மநாபன் ஐயா அவர்கள் பேரவையில் நடத்திய பயிற்சிப்பட்டறையில் உருவான பொங்கல் மற்றும் தமிழின் பெருமை பற்றிய பாடல் ஆகும். இவற்றை நுணுக்கமான நேரடி இசை சேர்த்து மேடையேற்றினர். மூன்றாவது பாடலாக, ஒரு பிரபலமான திரை இசையின் மெட்டில் திருமதி ரேவதி ராஜு எழுதிய சங்கத்தின் பெருமை பேசும் பாடல், தவில், பறை இசையுடன் பாடப்பட்டு பெரும்

வரவேற்பைப் பெற்றது. கடந்த 10 ஆண்டுகளாக இசைக்குழுவைத் தொகுத்து தொடர்ந்து திரு. செந்தில்குமார் கலியபெருமாள் வழிநடத்தி வருகிறார்.

விழாவின் சிறப்பு விருந்தினராக மினசோட்டா மாநில செனேட்டர் திரு. பிராட் (Senator Pratt) அவர்கள் கலந்துகொண்டார்.

மினசோட்டாத் தமிழ்ச் சங்கமும் பள்ளியும்

இணைந்து உருவாக்கிய “தமிழர் வரலாற்றுக் காலவரிசை” எனும் தமிழர் வரலாறு, மொழி வளர்ச்சி, கலாச்சார அடையாளம் பேசும் அதி அற்புத நூலை இணையத்தில் டிஜிட்டல் வடிவத்தில் வெளியிட்டிருந்தோம். அது சார்ந்த காணொலி ஒளிபரப்பப்பட்டது.

மினசோட்டத் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து நடத்திய பயிற்சிப் பட்டறைகளில் ஆசான்களிடம் பயின்ற மாணவர்கள் 15க்கும் மேற்பட்டோரின் 25 நிமிட பறையாட்டம் துள்ளலாக அரங்கேற்றப்பட்டது. குறிப்பாக பத்மஸ்ரீ வேலு ஆசான் அவர்கள் கற்பித்த வடிவத்தை இளம் தலைமுறையினர் கற்றுத் தேர்ந்து, அதைப் பறை மாணவர்களுக்குக் கற்பித்து, பறையாட்டத்தை முன்நின்று நடத்தி மேடையேற்றி வருகிறார்கள். அவர்களின் பயிற்சி, உற்சாகம் மற்றும் அர்ப்பணிப்பு அளப்பரியது. பார்ப்போரை எழுந்து ஆடத் தூண்டும் அடியும் அடைவுகளும் கண்களுக்கு விருந்து. சமூகத்திற்குத் தன்னால் இயன்றதை மனதாரத் திரும்பச் செய்வதென்பது தம் தமிழர் வாழ்வியலுள் ஒன்று. எங்கள் இளம் வித்தகர்கள் தீரஜ் பாலமுருகன் மற்றும் ஆதித்யா சிவானந்தன், பறையாட்டத்தை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சென்று இந்தக் கூற்றை உறுதிப்படுத்துகிறார்கள். அதனாலேயே எங்கள் அனைத்துக் கூட்டு முயற்சிகளிலும் இலக்குகளிலும் இது மிக அர்த்தமுள்ள ஒன்றாகும்.

இந்தக் கலையை இளம் தலைமுறை இவ்வளவு உற்சாகத்துடன் ஏற்றுக்கொள்வதைப் பார்ப்பதில்



சங்கம் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறது.

நமது சிறப்பு விருந்தினர் செனேடர் பிராட் அவர்கள் மினசோட்டா தமிழ்ச் சமூகத்தின் மொழிப்பற்று, மரபு மற்றும் ஒருமைப்பாட்டைப் பாராட்டி உரையாற்றினார். பின்பு சங்கம் சார்பாக அவர் கௌரவிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு மினியாபொலிஸ்-செயிண்ட் பால் சர்வதேச விமான நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்ட தமிழர் நிகழ்த்துக் கலைகளின் பதாகைத் தொகுப்பை நினைவுகூரும் காணொலி திரையிடப்பட்டது. இக்காணொலியில் கலைஞர்கள் தங்களின் படைப்பு அனுபவங்களையும், இந்திய-மினசோட்டா கலாச்சார இணைப்பையும் உணர்வுப்பூர்வமாகப் பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக "பழந்தமிழ் செவ்வியல் கலைகள்" என்ற நாடகம் அமைந்தது. "மரபுக் கலைகளும் செவ்வியலே" என்ற கருத்தை மையமாகக் கொண்டு, 30க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இணைந்து சதிர் போன்றே கரகம், ஒயில், சிலம்பம், பறை போன்ற நம் மரபுக்கலைகள் யாவும் செவ்வியல் தன்மை உடையவையே என்று ஒப்பிட்டுக் காட்டும் நாடகத்தை அரங்கேற்றினர். இத்தகைய பொருள் படும் பெருமைமிகு நாடகத்தை பார்வையாளர்கள், விருந்தினர்கள் மனமார்ந்த பாராட்டுக்களுடன் வரவேற்றனர்.

கலாச்சார மேடையில் விளையாட்டுத் துறைக்கும் உரிய மரியாதை வழங்கப்பட்டது. சென்ற நவம்பர் மாதம் நடைபெற்ற 10ஆவது மாநில அளவிலான சதுரங்கப் போட்டியின் வெற்றியாளர்களுக்கு மேடையில் பரிசுகள் வழங்கப்பட்டன. பல ஆண்டுகளாக இப்போட்டியைத் திறம்பட நடத்தி வரும் நடுவர் திரு. ஜேம்ஸ் டைடஸ் அவர்களை கௌரவித்தோம். அவருடன் இணைந்து உறுதுணையாக இருந்த சௌமியா சுப்ரமணியம், சூரியா சுப்ரமணியம், தியா சுப்ரமணியம் ஆகியோரும் பாராட்டுச் சான்றிதழ் மூலம் கௌரவிக்கப்பட்டனர். இதனை 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் நம் சங்கத்தின் மேனாள் தலைவரும் இந்நாள் இயக்குநர் குழு உறுப்பினருமான திருமதி பிரியா CK அவர்கள் பாராட்டப்பட்டார்.

மேலும், சங்கத்தின் மூலமாக தொடர்ந்து நடத்தப்படும் தன்னார்வப் பணிகளுக்கு பங்களித்துவரும் உறுப்பினர்களும் மேடையில் அழைக்கப்பட்டு, அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதனை தொடர்ந்து ஒருங்கிணைத்து வெற்றிகரமாக நடத்திவரும் நம் சங்கத்தின் பொருளாளர் திரு. ராம் சின்னதுரை அவர்களும், நமது விருந்தினர் திரு. கேரட் (Garrett Zaffke) அவர்களும் மேடையில் சிறப்பாக கௌரவிக்கப் பட்டனர்.

இதைத்தொடர்ந்து, மினசோட்டா தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மற்றும் பொருளாளர் உரையாற்றினர்.

மினசோட்டா தமிழ்ச்சங்கத்தின் செயற்குழுவில் இணைச் செயலாளர், செயலாளர், பொருளாளர், துணைத் தலைவர் மற்றும் தலைவர் போன்ற அனைத்து பொறுப்புகளிலும் சிறப்பாகப் பணியாற்றி, தமது தலைவர் பதவிக்காலத்தை முழுமையாக நிறைவு செய்த திரு. செந்தில்குமார் கலியபெருமாள் அவர்களை, செயற்குழுவினரும் சங்க உறுப்பினர்களும் இணைந்து நினைவுப்பரிசு மற்றும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

பின்னர், திரு. செந்தில்குமார் அவர்கள் தமிழ்ச் சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்களையும் அறிமுகம் செய்தார்.

சத்தமில்லாமல் பல சாதனைகளைச் செய்து கொண்டிருக்கும் நம் மினசோட்டாத் தமிழ்ச் சங்கப் பள்ளியின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்புத் தலைவர் திரு. ஸ்டாலின் பொன்னுசாமி அவர்கள் பள்ளி சார்ந்த அனைத்து முன்னெடுப்புகளையும் விளக்கினார். தம் தொலைநோக்குப் பார்வையால் இமயம் தாண்டி எட்டிக்கொண்டிருக்கும் எங்கள் பள்ளிக்கு பாராட்டுகள் குவிந்தன.

முத்தாய்ப்பாக சிறியவர் முதல் பெரியவர் வரை கலந்துகொண்ட நம் சங்க உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் மனதைக் கவரும் வகையிலும், கருத்தாழம் மிக்கதாகவும், அழகாக ஒருங்கிணைந்த இயக்கத்திலும், சிறந்த பாடல் தேர்விலும் உற்சாகத்துடன் அரங்கேறியது.

இரவு 8:30 மணிக்கு சங்கத்தின் செயளாலர் திரு. மணிகண்டன் ஜெயராமன் அவர்களின் நன்றி உரையுடன் *சங்கமம் 2026* நிறைவு பெற்றது. காலை முதல் இரவு வரை — ஒவ்வொரு தாளமும் ஒவ்வொரு அசைவும் ஒரே பிணைப்பைச் சொன்னது: *தமிழும், மரபும், சமூகமும் — என்றும் ஒற்றை இதயமாக இணைந்திருக்கும்* என்பதே.

அரங்கம் முழுக்க சிரிப்பு, இசை, தாளம், ஒற்றுமை ஆகியவை கலந்த ஒரு மனநிறைவான இந்த விழா மினசோட்டாவில் ஆண்டுதோறும் எழுதிக்கொண்டிருக்கும் தமிழர் கலாச்சார வரலாற்றின் ஒரு பொற்கோலாக மாறியது.

# டென்னசி தமிழ்ச் சங்கம்




டிசம்பர் 6, 2025 – ஆண்டு முழுவதும் பங்காற்றிய தன்னார்வலர்களை கௌரவிக்கும் “தன்னார்வலர் சந்திப்பு” நடைபெற்றது. 2026 – 2027 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகக் குழு மற்றும் உறுப்பினர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். மேலும் 2026 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் புதுப்பித்தல் செயல்முறை தொடங்கப்பட்டது.

பிப்ரவரி 14, 2026 – தமிழர் திருநாள் பொங்கல் விழா ஆனந்தமாக நடைபெற்றது! இந்த விழாவில் “பொங்கல் ராஜா/ராணி”, “இளவரசி/இளவரசன்” மற்றும் "கைவினைப் போட்டிகள்" சிறப்பாக நடத்தப்பட்டன. அதே நாளில், TTS Youth Committee Leadership மற்றும் உறுப்பினர்களுக்கான அறிவிப்பும் வெளியிடப்பட்டது.









# நெகிழிக் கப்பல்

காஞ்சனா பக்தவத்சலம் பிட்ஸ்பர்க், பென்சில்வேனியா

மழை நின்ற மண் வாசம்
எழுகின்ற நேரம்...
தேங்கி நிற்கும் மழை நீரில்
பிள்ளைகள் விடும்
சிறியதோர் காகிதக் கப்பல்...!

அதுபோல் அல்ல
நெகிழிக் கப்பல்,
நீளமும் அகலமுமாய்
கடல் நடுவே மிதப்பதிந்த
நெகிழிக் கப்பல்...!

கண்ணாடிக் கதவுகள்
மெல்லத் திறக்கும்...
பின்னால் தானியங்கி இயந்திரம்,
தொடுதிரையைத் தொட்டதும்
கொட்டித் தீர்க்கும் குளம்பி...!

வாசமோ
வீதி வரை,
அருந்திய கோப்பைகளோ
பூமித்தாயின் கண்ணில்
தூசியாய்...!

சாலையோரம்
துரித உணவுக் கடைகள்...
மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்...!

முட்கரண்டியில்
உண்பது வசதி தான்,
உண்ட பின்
பூமித்தாயின் தலையில்
முள் கிரீடம் தான்...!

எடுப்புச் சாப்பாடு
வீடுவரை விநியோகம்...
உணவின் சுவையோ அபாரம்
அதில் சேரும்
கொஞ்சம் இரசாயனம்...!

இருந்தால் இருக்கட்டும்
என்னை என்ன செய்யும்
என்ற அசட்டு தைரியம்,
உணவுக் கலன்களோ
கழுத்தில் சங்கிலியாய்...!

கோடைக் காலம்
வெயிலின் வாட்டம்,
மனம் தேடும் குளிர்பானம்...
குழந்தைகள் விரும்பும்
குச்சி மிட்டாய்...!

குச்சிகளும்,
உறிஞ்சு குழாய்களும்
மூச்சுக்குழாயில் முள்ளாய்...!

கடைவீதிக்கு செல்கையில்
எடுக்க மறந்து போகும்
மறுபயன்பாட்டுப் பைகள்,
வீட்டில் வாங்கி
வைத்தென்ன லாபம்?

இன்றொரு நாள் மட்டும்
வாங்கிக் கொள்ளலாம்
நெகிழிப் பைகள்,
வாங்கிய நாட்கள் எத்தனை?

நெகிழிகள் எழுவகை,
அதில் பாதியோ
பெறுவதில்லை மறுசுழற்சி,
மீதியோ நெகிழிக் கப்பலில்...!

யாரும் பயணிக்க
முடியாக் கப்பல்,
கரை சேர
வழியில்லாக் கப்பல்...!

சிக்கித் தவிக்கும்
கடல் ஆமைகள் சில,
கொத்துக் கொத்தாய் மிதக்கும்
மீன்களும் கூட,
திமிங்கலமும்
விதிவிலக்கல்ல...!



**காஞ்சனா**
**பக்தவத்சலம்**
**பிட்ஸ்பர்க், பென்சில்வேனியா**

கானல் நீரல்ல இது,
இனியும் நீடிக்கும்
நூற்றாண்டுகள் பல...!

கடலோரமாய் கரையொதுங்கும்
கடற்பறவைகள் சில,
காணாமல் போகும்
கடைசி நட்சத்திரக் கடல்
சிங்கமும்...!





நெஞ்சில் தைத்த அம்பாய்
நெகிழிக் கப்பல்...!

பார்க்கப் போனால்
பாதியில் வந்த
பழக்கம் தான்...!

இனியும் ஒரு முறை
ஆடம்பரப் பொருள் தேடி
கைகள் நீள்கையில்,
மனம் ஒரு முறையேனும்
எண்ணிப் பார்க்கும்...!

தீப்பொறி போல்
ஒரு எண்ணம் போதுமே,
மாற்றமும் நிகழாதோ
அழகிய வானவேடிக்கையாய்...!

தமிழால் இணைந்தோம்! நன்றி!



# தமிழ் பேசுகிறது!



**பிரதிபா சம்பத்குமார்**
**முனிச் தமிழ்ச் சங்கம், ஜெர்மனி**

எழுவாய், செயப்படுபொருள் , பயனிலை என அன்று
என்னை வகுத்திட்ட நீ இன்று எழுவாய்!
செய்யப்பட வேண்டிய பொருள் அறிவாய்!
உயர் பயன்நிலை அடைவாய்!

தேமா புளிமாவோடு சேர்த்து என்னைச் சுவைத்த நீ
எதிலும் தொடர் தேடலையும் தெளிவான புரிதலையும்
தவிர்க்கலாமா?

நோய் நாடி நோய் முதல் நாடித் தீர்க்க
மெய்யியல் இருக்க பொய்யான போதை தரும் மதுவினை
நீயும் நாடிடுதல் முறையா?

சுருங்கச் சொல்லியும்
என்னை விளங்க வைத்தாய் !
சுருக்கிடலாமா நீயும் நீர் நிலைகளைத் தான்?

மூதாட்டியின் மூதுரை கேட்டறிந்த உனக்கு
மூத்தோருக்கு மூப்பில் பணிவிடையாற்ற முனைப்பு இல்லாமல்
போகலாமா?

ஆயிரம் நீதிக் குறள்களில் ஒன்றைத் துளிர்விடும்
தளிர்களின் குரல்கள் நித்தம் பழகுதல் வேண்டாமா?

அன்று அணிந்துரை , முகவுரை , நூன்முகம் கொண்டு நன்னூல்(கள்)
படித்துரைத்தாய் !
இன்றோ முகநூல் முகப்பில் மட்டுமே முனைப்புக் காட்டுவதேனோ?

அச்சமயம் பெருந்தகைகள் அரிச்சுவடிகள் கொண்டு
தோற்றுவித்த என்னை தற்சமயம் தவிர்த்து
பெருந்தொகை ஈட்டல் மட்டும் உன் நாட்டமாக இருந்திடலாமா?

எதுகையும் மோனையும் கொண்ட எழுத்து விளைவித்த
காலங்கள் மறைந்து பதட்டமும் பாய்ச்சலுமாக சாலைகளில்
விபத்தை விபரீதமாய் விளைவிப்பது ஏனோ?

அந்நாளில், நுகர்ந்தாலே வாடிடும் அனிச்சமலரைப் போல்
விருந்தினரை ஓம்பி இந்நாளில் பகிர்ந்துப் பழக மறந்திடல்
முறையா?

புறநானூற்று வீரம் விவரித்து புளகாங்கிதம் அடையாமல்
புறம் பேசி பரிகாசம் செய்தல் கூடுமா?

உள்ளன்பு உரைக்க உயர் காதல் சொல்லிட
அகத்திணை இருக்கையில்
குடும்பம் கூடிக் குலாவுவதை குறைத்து
இலக்கில்லாமல் வலைதளத்தில் உலாவுதல் உகந்ததா?

மண்ணை அகழ்ந்து காலச்சுவடுகள் தேடும் அதே வேளையில்
மனதை ஆழ்தறிந்து சாலச் சிறந்ததை நாடிடு.
அறிவுப் பாசறைக்கு கூர்புத்தி ஆயுதமாகட்டும்
அன்பு செய்ய மனதில் பாச அறைகள் உருவாகட்டும்

இவண், உன்னால் என்றைக்கும் இயற்றப்பட, போற்றப்பட, பேசப்பட
ஆசைப்படும்
உனது தமிழ்.

# ஷீலாவின்
# ஹைக்கூ







ஷீலா ரமணன்,
சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம்


முந்திக் கொண்டு பூத்தன
விசுவாசமாய் சிவப்பு ரோஜாக்கள்
முதலாளியின் பூத உடலுக்கு

---



புது தாலியுடன் டீச்சர்
இதயம் கிழிந்தது
டிக்கெட்டைப் போல
ஒருதலைக் காதல் கண்டக்டர்

---



ஊரெல்லாம் நவராத்திரி கோலாகலம்
வீடுவீடாய் சுண்டலும் பொங்கலும்
ஏக்கமுடன் விற்காத பொம்மைகள்

---

விதவிதமாய் வகைவகையாய்
நகைகள்
போட்டுப் போட்டு களிக்கிறாள்
கள்வனின் காதலி


---

ஜீனியில் குளித்தபடி
சுடச்சுட வந்தன
டோநட்டுகள்- ஏக்கத்துடன்
சக்கரை நோயாளி
முதலாளி



திருமண ஆல்பம் பிரிக்கவில்லை
முறைத்தபடி புது தம்பதியினர்
நீதிபதியின் இறுதி தீர்ப்புக்கு

---



விடாமல் துரத்தும் மாதவிடாய்
விட்டுவிட்டுத் துரத்தும் மாமியார்
தவிப்புடன் மருமகள்

---

எவரும் குடிவர அஞ்சும் பங்களா
கூடி கும்மாளமிட்டன மனித வேடத்தில்
காஞ்சனா பேய்கள்

---

பூக்கோலம் போடாத கவலையுடன் புதுமனைவி
பனிபொழியும் ஊரில்! கோலப்போட்டியில்
மாநிலத்தில் முதலிடம்




# சிறுமை உலகில் சிதையும் சிறார்கள்

## டிலானி லோகேஸ்வரன்

தலை வாயில் பாலர் வாழ்வு
முகாரி இராக மிசைப்பதோ?
விதலை அவலம் விளைத்த மதலை
விலாச மின்றி மாய்வதோ?
பதவி பட்டம் தேடிக் கொடுக்கும்
பள்ளிப் படிப்புக் கானலோ?
மிதவை ஒன்றைப் பற்றச் சுழலில்
மெல்லக் கரங்கள் நீளுமோ?

திடலை மறந்த பிள்ளைப் பருவம்
திசைகள் மாறி அலைவதோ?
விடலைப் பருவம் வீதி திரிந்து
விதியை எண்ணி நோவதோ?
உடலை உருக்கி உணர்வைக் கருக்கி
உதரம் வளர்த்துச் சாவதோ?
சடலம் கண்ட பின்னர் பேசும்
சட்டம் சதுப்பு நிலத்திலோ?


கொழுந்து கொய்து விழுந்து மாய்ந்த
கொழுந்தின் உயிரும் திரும்புமோ?
புழுவைப் போன்று பிஞ்சை நசுக்கிப்
புணரும் கொடிய விசமிகள்
அழுகிப் போகும் உடலின் தாகம்
அவளின் கனவைக் கலைப்பதோ?
மழுவைத் தாங்கும் சிவனின் கையும்
மாய மாகிப் போனதோ?

வெந்த செங்கல் சூளை மேட்டில்
வீணாய் மலர்கள் கருகுதே!
வந்து தடுக்க நாதி யின்றி
வாடி வதங்கி மடியுதே!
எந்த நாட்டுக் காசை அள்ளி
இழந்த பின்னர் இறைப்பினும்
நந்த வனத்தில் உதிர்ந்த பூக்கள்
நாளை மீண்டும் மலருமோ?

பொறுமை காக்கும் நேர மல்ல
பொங்கி உடனே எழுந்திடு!
சிறுவர் தம்மை உறிஞ்சிக் குடிக்கும்
சிறுமை உலகை எதிர்த்திடு!
வறுமை நீங்கச் சிறிய முதுகை
வளைக்கும் நிலைமை ஒழித்திடு!
வெறுமை வாழ்வு நிலைக்கப் பூட்டும்
விலங்கை அடித்து உடைத்திடு!





# வியப்பு

குறுகிய காலத்தில் கொரோனாவுக்கு மருந்து
குருத்தணு சிகிச்சை மருத்துவத்தின் மகத்துவம்

அசுர வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவு
ஆச்சரியமாய் உள்ளங்கை வழி பணம்செலுத்துதல்

விண்ணைத்தாண்டும் விண்வெளி சாதனை
வானிலை கணிப்பு எம்போதும் செவ்வை

ஆழ்கடல் அருங்காட்சியகம் காண்போர் களிப்பு
அலைபேசிச் செயலி அன்றாட பயன்பாடு

தானியங்கி ஊர்தி வாகனப் புரட்சி
துரிதமான இணையம், விரைவான பயணம்

புதுமைகள் நாள்தோறும் பூக்கும் தரணியில்,
முதுமொழி தமிழின் மூப்பின்மை வியப்பே!



கோயில்ராஜா
பால்சிங்
டென்னசி தமிழ்ச்சங்கம்





# புத்தகம்

**ஸ்ரீ லேகா ஓம்பிரகாஷ்**
**SFBATM**



தூசு படிந்த
கறை பிடித்த புத்தகமானாலும்
வாசித்துப் பார்..
புத்தகத்தின் சில பக்கங்கள்
உன் மனதின்
தூசுகளை கறைகளை
துடைத்தெடுக்கக்கூடும்!
பக்கங்கள் சில தொலைந்த
கிழிந்த புத்தகமானாலும்
வாசித்துப் பார்..
தொலையாத சில பக்கங்கள்
நீ  தொலைத்த ஒன்றை
தேடிக் கொடுத்து உன்னை
புதிதாக மாற்றக்கூடும்!
பரண் மேல் அனாதையாய்
கிடக்கும் புத்தகமானாலும்
வாசித்துப் பார்..
புத்தகத்தின் சில பக்கங்கள்
உன்னை பின்னிப் பிணைத்து
அரவணைக்கக்கூடும்!
புத்தகத்தை வாசிக்காவிட்டாலும்
பரவாயில்லை
பழைய புத்தகத்தின்
வாசத்தையேனும் ஒரு முறை
நுகர்ந்து பார்..
நீ மறந்து போன பல
அழகான நினைவுகளுக்குள்
உன்னை இணைக்கக்கூடும்!

-ஸ்ரீ






# வாழ்க்கை வாழ்வதற்கே!

அந்தி மாலை பொழுதினிலே
மதி மயங்கும் நேரத்திலே
ஆகாயம் கறுத்திருக்க
மழைச்சாரல் முகத்தில் தெறித்திருக்க

சில்வண்டின் ரீங்காரம்
சிறியவர்களின் ஆரவாரம்
மண் வாசனை நாவூற
மனதும் கவலை துறந்ததே

தேநீரின் சுவையோடு
இசைஞானியின் இசையோடு
வானம் வாழ்த்த
வாழ்க்கை அற்புதமானது
எந் நொடியும் சொர்க்கமாகும்
ரசித்து நீயும் வாழ்ந்தாலே
வாழ்க்கை வாழ்வதற்கே
விரும்பி நீயும் வாழ்ந்துவிடு .

**யோகிதா கிருஷாந்தன்**
**பாஸ்டன் தமிழ் அசோசியேஷன்**






# தமிழிசை விழா - சென்னை

## இராமலெட்சுமி நடராசன்,
### தகவல் தொடர்புக்குழு தலைவர்.

**"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே !" – திருவருட்பா.**
**மொழிக்கு முன்னே தோன்றியது இசை.**
**இசையிலிருந்து மொழி பிறக்கிறது.**
**எனவே மொழிக்குத் தாய் இசை என்பர்.**

இறைவனையே, 'ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவனே' என்று போற்றுவதும் உண்டு.

**வாழ்விலே இசையையும், இசையிலே வாழ்வையும் கண்டவர்கள் தமிழர்கள்.**

**தாலாட்டு தொடங்கி ஒப்பாரி வரைக்கும் அனைத்து நிகழ்விற்கும் இசை ஒரு முக்கிய கூறு.**

**தமிழர்களின் இசையான தமிழிசை ஒரு செவ்வியல் இசை.**

செவ்வியல் இசை என்பது காலத்தால் அழியாத, ஆழமாக வேரூன்றிய, உயர்ந்த தரத்தினாலான பண்பாட்டின் வடிவமே. தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து இருப்பதால் தான் முத்தமிழில் ஒன்றாக, இசையை நம் முன்னோர்கள் வைத்துள்ளனர். பண் இசை, தமிழ் இசை, பக்தி இசை, நாட்டார் இசை, திரையிசை, சொல்லிசை என பல வடிவங்களில் இசை உள்ளது.

சங்க காலத்தில் தமிழிசை சிறப்புற்று விளங்கியதை சங்கப் பாடல்களில் காணமுடிகிறது. உதாரணமாக சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் சித்திரை முழுநாளில் நடைபெறும் இந்திர விழாவில் கோவலனும், மாதவியும் கூடிக் களிக்கிறார்கள். அப்போது எட்டுவகையான கலை நுட்பம்கொண்டு யாழினை மீட்டி மாதவி இசை எழுப்பினாள் என்று இளங்கோவடிகள் யாழின் சிறப்பு இசை நுட்பங்களை






குறிப்பிடுகிறார். இதுமட்டுமல்ல பல சங்க இலக்கியங்களில் இது போன்ற தமிழிசைக்கான குறிப்புகளைக் காணலாம்.

**குறிஞ்சிப்பண் மழைக்குரியது;**
**விடிகாலைக்கு மருதப்பண்;**
**மாலைக்கு செவ்வழிப் பண்.**
**வழிப்பறி கள்வர்களை மயங்கச் செய்வது பாலைப்பண்;**
**வீர மரணமடைந்தவர்க்கு விளரிப்பண்;**

இப்படி பழந்தமிழ்ப் பண்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்திற்கும் மேல் இருந்திருக்கிறது. பாணனும் பாடினியும் தமிழிசை பாடி மகிழ்ந்ததை சங்கப் பாடல்களில் காண முடிகிறது.

இப்படி செழித்திருந்த தமிழிசை பிற்காலத்தில் வேற்று மொழி மரபுகளின் ஆதிக்கத்தாலும், படையெடுப்பாலும் தேக்க நிலை அடைந்தது. அதன் விளைவு,

**கோடிப்பாலை கரகரப்பிரியா ஆனது;**
**விளரிப்பாலை தோடி ஆனது;**
**மேற்செம்பாலை கல்யாணி ஆனது;**
**இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.**

பக்தி காலத்தில் பாடப்பட்ட பக்தி இலக்கியங்களால் மீண்டும் தமிழிசை தழைத்தது.

இருப்பினும் மீண்டும் வந்த வேற்று மொழி மரபுகளின் ஆதிக்கம் தமிழிசையை ஒடுக்கியது. அந்த நேரத்தில் தான் தமிழ் இசையின் ஆதி மும்மூர்த்திகளான

- முத்துத்தாண்டவர் தமிழிசையை செழுமைப்படுத்தினார்.
- அருணாசலக் கவிராயர் இசை நாடகங்களை இயற்றி, தமிழிசையை மக்களிடம் கொண்டு சேர்த்தார்.
- மாரிமுத்தாப்பிள்ளை புகழ்பெற்ற கீர்த்தனைகளை இயற்றினார்.

1917 ஆம் ஆண்டு தமிழிசை மேதை தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் எனும் பெருமகனார் கருணாமிர்த சாகரம் எனும் அரிய தமிழிசை ஆய்வு நூலை எழுதி வெளியிட்டு தமிழிசைக்கு உயிர் ஊட்டினார். மேலும்






அண்ணாமலை செட்டியார் தமிழிசை இயக்கத்தைத் தொடங்கி, இசை நிகழ்ச்சிகளில் தமிழ்ப் பாடல்கள் மட்டுமே இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்தினார். அண்ணாமலை செட்டியாரின் புதல்வர் முத்தையா செட்டியார் (செட்டி நாட்டரசர்) மதுரையில் தமிழ் இசை மன்றம் கட்டி தமிழிசை காவலர் ஆனார்.

இப்படியாக பல இசைமேதைகளின், இசை ஆர்வலர்களின் தன்னலமற்ற உழைப்பால், 20-ஆம் நூற்றாண்டில் தமிழிசை மீட்கப்பட்டு, மீளுருவாக்கம் செய்யப்பட்டு, தற்போது மீண்டும் வளர்ந்து வருகிறது.

இத்தகைய அரிய, தொன்மையான, தமிழரின் அடையாளமாக விளங்கும் தமிழ் இசையை தமிழ் கூறும் தலைமுறைக்கு எடுத்துச் செல்வது வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று.

தமிழ் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம் என தமிழ் சார்ந்த அனைத்து தளங்களிலும் தொடர்ந்து செயல்பட்டு வரும் நாங்கள் தமிழிசைக்காக ஒரு தனிக் குழுவை அமைத்து செயல்பட்டு வருகிறோம். முனைவர் அரிமளம் சு.பத்மநாபன், முனைவர் ஆ. ஷைலா ஹெலின் இன்னும் பல தமிழிசை அறிஞர்களையும், கலைஞர்களையும் அழைத்து இணையவழியில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்திவருகிறோம். அதுமட்டுமல்ல வருடம் ஒரு முறை அமெரிக்காவில் நடைபெறும் பேரவை மாநாட்டிற்கும் அழைத்து சிறப்பு செய்துவருகிறோம்.

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் இசைக்கடல் பண்பாட்டு அறக்கட்டளையும் இணைந்து நடத்திய தமிழிசை விழாவின் 13-ஆவது ஆண்டு விழா, கடந்த ஆண்டு (2025) டிசம்பர் 29-ஆம் நாள் சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பேரவைத் தலைவர் திரு. விஜய் மணிவேல், துணைச்செயலாளர் திருமிகு ஜான்சிராணி பிரபாகரன், தகவல் தொடர்புக்குழுவிலிருந்து திரு கொழந்தவேல் இராமசாமி, தமிழிசைக் குழு தலைவர் திரு பாபு விநாயகம், பொருளாளர் வள்ளிக்கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தினர். ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், திரு வை. குமார், திரு. கிருஷ்ணசாமி வாண்டையார், திரு. சைதை சா. துரைசாமி, திரு. தஞ்சாவூர் கவிராயர், திருபுவனம் ஆத்மநாதன் ஐயா இன்னும் இசை ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மரபுக் கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், குறிப்பாக குழந்தைகளின் நிகழ்ச்சிகள் காண்போரை இசைக் கடலில் திளைக்கச் செய்தது. தமிழிசையின் மேன்மையை எடுத்துரைக்கும் பொருட்டு பேரவை சார்பில் நடத்திய இவ்விழா இசை அன்பர்களுக்கு ஓர் இனிய நிகழ்வாகவே அமைந்தது.

இது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் தமிழிசையின் சிறப்பை, அதன் தொன்மையை, தமிழிசை குறித்து வந்துள்ள ஆராய்ச்சி நூல்களை உலகிற்கு எடுத்துச்செல்ல முடியும் என்று நம்புகிறோம். இந்த அழகிய நிகழ்வின் சில புகைப்படங்களை உங்களோடு பகிர்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

**தேமதுர தமிழோசையோடு,**
**தேமதுர தமிழிசையையும்**
**உலகெல்லாம் பரவச் செய்வோம்!**





# அயலகத் தமிழர் திருவிழா சென்னை

## இராமலெட்சுமி நடராசன்,
தகவல் தொடர்புக்குழு தலைவர்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே -
எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"
- மகாகவி பாரதி

திரைகடல் ஓடியும் திரவியம் தேடச் சென்ற தமிழர்களின் உலகளாவிய தாக்கத்தைப் போற்றும் விதமாகவும், அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு சார்பில் அயலகத் தமிழர் நாள் விழா கொண்டாடப்பட்டுவருகிறது. இத்திருவிழா சனவரி 11, 12 (2026) ஆகிய இரு நாள்கள் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு நாடுகளிலிருந்து அரசு மற்றும் மக்கள் பிரதிநிதிகள், உலகெங்கும் உள்ள சாதனைத்தமிழர்கள் என அனைவரும் கலந்துகொண்டு
















சிறப்பித்தனர். இத்திருவிழா மொழி, வரலாறு, கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களின் சங்கமமாகும். கலாச்சாரம், புதுமை, கல்வி மற்றும் உலகளாவிய வளர்ச்சியில் சிறந்த பங்களிப்பு செய்தோருக்கான உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் விருதுகளும் இந்நிகழ்ச்சியில் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டன. கடந்த முறை போலவே இந்த முறையும், பேரவை சார்பில் அமெரிக்க வாழ்வியலைப் பற்றிய பல்வேறு தகவல்களுடன் சிறப்பானதொரு சாவடி அமைத்திருந் தோம். மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு மு. க .ஸ்டாலின், துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு கனிமொழி கருணாநிதி, அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் சா. மு. நாசர் , அமைச்சர் கார்த்திகேய சிவசேனாதிபதி, திருமிகு பி. அமுதா IAS, திரு எம். வள்ளலார் IAS இன்னும் பல அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டனர். புகழ்பெற்ற கவிஞரும், தமிழ்த் திரைப்பட பாடலாசிரியருமான மதிப்பிற்குரிய திரு அறிவுமதி, அரிமளம் திரு சு. பத்மநாபன், கவிஞர் சினேகன், கவிஞர் குட்டி ரேவதி இன்னும் பல ஆளுமைகள் கலந்து கொண்டனர். கவிஞர் அறிவுமதி
















அவர்கள் எழுதிய பாடல் தான் விழாவைத் துவக்கியது. தமிழ் மொழி பற்றிய உணர்ச்சிபூர்வமான பாடல் வரிகளும், பாடலைப் பாடிய பாடகர்களும், இசையும் அதற்கேற்றாற் போல் வடிவமைக்கப்பட்டிருந்த ஒளிக்காட்சியும் காண்போர் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. தொடர்ந்து பல்வேறு அமைச்சர் பெருமக்களின் சிறப்புரை, தமிழிசை பற்றிய சொற்பொழிவு, கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள் ஒரு புறம்; தமிழ்நாடு மட்டுமல்ல, பல நாடுகளில் இருந்தும், பல்வேறு தமிழ்ச் சங்கங்களில் இருந்தும் கண்கவர் கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. பேரவைத் தலைவர் திரு விஜய் மணிவேல், துணைச்செயலாளர் திருமிகு ஜான்சிராணி பிரபாகரன், பொருளாளர் திரு வள்ளிக்கண்ணன் மருதப்பன், நிர்வாகக் குழுவிலிருந்து திரு சண்முகசுந்தரம் குத்தாலிங்கம், திரு வெற்றிவேல் பெரியையா, தமிழிசைக் குழு தலைவர் திரு பாபு விநாயகம், தகவல் தொடர்புக் குழு தலைவர் திருமிகு ந. இராமலெட்சுமி, *FiTEN* ஒருங்கிணைப்பாளர் திரு













சின்னசாமி பாப்பனன் துணை ஒருங்கிணைப்பாளர் திருமிகு சாந்தி தங்கராசு, *FiTEN* துணைத் தலைவர்கள் திரு பாரதி பாண்டி மற்றும் திரு கோபி இராமசாமி இன்னும் பல நண்பர்களும் பேரவை சார்பில் கலந்துகொண்டனர். பேரவை சார்ந்த செயற் பாடுகளையும், வட அமெரிக்க தமிழர்களையும் உலகத் தமிழர்களையும் இணைக்கும் பலமாக பேரவை எவ்வாறு செயல்பட்டுவருகிறது என்பதையும், *FiTEN* பன்னட்டுத் தமிழர் தொழில் முனைவர் மாநாடு பற்றியும் பல்வேறு தகவல்கள் பகிரப்பட்டன. பேரவையின் மேனாள் தலைவர் திரு. கால்டுவெல் வேள்நம்பி உடனிருந்தார். வந்திருந்த அனைவருக்கும் இடவசதியும், உணவு மற்றும் போக்குவரத்து வசதியும் தமிழ்நாடு அரசால் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விழாவிற்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்த விழாமலர் கண்ணைக்கவரும் பல கவிதை, கட்டுரைகளின் தொகுப்பாக வெளியிடப் பட்டு அனைவருக்கும் பரிசாக அளிக்கப்பட்டது கூடுதல் சிறப்பு எனலாம்.



# மிச்சிகன் தமிழ்ச் சங்கம்















# மிச்சிகன் தமிழ்ச்சங்கம்

அன்பிற்கினிய வடஅமெரிக்க தமிழ்ச் சொந்தங்களே, இனிய வணக்கம்!

மிச்சிகன் தமிழ்ச்சங்கம் கடந்த ஆண்டு அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடத்திய நிகழ்வுகளை இங்கேதொகுத்திருக்கின்றோம்.

**அக்டோபர் மாத நிகழ்வுகள்:**

வருடம் தோறும் நவம்பர் மாதத்தை குழந்தைகள் மாதமாக அறிவித்து குழந்தைகளுக்கான பலவித நிகழ்ச்சிகளை நடத்தும் மிச்சிகன் தமிழ்ச் சங்கம் அக் 26 ஆம் தேதி குழந்தைகளுக்கான பேச்சுப் போட்டி ஒன்றை நடத்தியது. சமூக மாற்றத்திற்கு வித்திட்ட ஆளுமைகளான பாரதியார், காமராசர், பெரியார், வ.உ.சி, மருத்துவர் முத்துலட்சுமி அம்மையார் குறித்த தலைப்புகளில் குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு சிறப்பாகப் பேசினர். இணைய வழியில் நடந்த இந்த பேச்சுப் போட்டியில் பாவலர் திரு. அருள்மதி ஐயா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குழந்தைகளைப் பாராட்டி ஊக்குவித்தார்.

**நவம்பர் மாத நிகழ்வுகள்:**

**நவ 09**

மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் எத்திக்கும் தித்திக்கும் தீபாவளித் திருநாள் கொண்டாட்டம் ரெட்ஃபோர்ட் நகர தேர்ஸ்டன் மேல்நிலைப்பள்ளியில் நவ 09 அன்று நடைபெற்றது. சைவ மற்றும் அசைவ பல்சுவை விருந்து, குழந்தைகள் முதல் பெரியவர்களின் கலை நிகழ்ச்சிகள் என சிறப்பாக நடைபெற்றது. மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் MiTEN அமைப்பின் சார்பில் திரு. சிவா மூப்பனார் தலைமையில் தொழில் முனைவோருக்கான ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. நம் சங்கம் நடத்திய பேச்சுப்போட்டி மற்றும் கொலுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினர்களாக திரு. மதுரை முத்து அவர்களும் திருமதி அன்னபாரதி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பான ஒரு நகைச்சுவை விருந்து படைத்தனர். இறுதியில் DJ வழி நடத்த சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பங்கு கொண்ட ஒரு நடன நிகழ்ச்சியுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

**திசம்பர் மாத நிகழ்வுகள்:**

**திச 14:**

கடந்த சில வருடங்களாக மிச்சிகன் தமிழ்ச் சங்கம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை நலிவடைந்த சமூகத்தினர் இடையே கொண்டாடி வருகிறது. அந்த வகையில் இந்த வருடம் திச 14 அன்று பாண்டியாக் நகரில் உள்ள Grace Center of Hope என்ற ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் பெண்கள் காப்பகத்தில் கொண்டாடியது. பல்வேறு விளையாட்டு, இசை நிகழ்ச்சி, பல்சுவை உணவு என்று அவர்களை மகிழ்வித்து மகிழ்ந்தது. காப்பகத்தில் இருப்போர் அவர்களின் வாழ்க்கை அனுபவங்களை பகிர்ந்தது நெகிழ்ச்சியாக இருந்தது. மேலும் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை கிறிஸ்துமஸ் பரிசுகளாக வழங்கி அந்த நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி முடித்ததில் MTS மகிழ்ச்சி கொள்கிறது.

**திச 21:**

குழந்தைகளுக்கான அடுத்த சிறப்பு நிகழ்ச்சியாக சதுரங்க போட்டி திச 21 அன்று ஃபார்மிங்டன் ஹில்ஸ் நகர பவர் நடுநிலைப் பள்ளியில் நடத்தப்பட்டது. சென்ற ஆண்டைப் போல இந்த ஆண்டும் MTS சதுரங்க போட்டி பிரம்மாண்டமாக நடந்து முடிந்தது.பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த நூறுக்கும் மேலான வீரர்களை ஈர்க்கும் வகையில் பரவலான வரவேற்பைப் பெற்றது.இந்த ஆண்டின் முக்கிய சிறப்பம்சமாக, Rated மற்றும் Unrated பிரிவுகளில் போட்டிகள் ஒன்றாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அனைத்து நிலை வீரர்களுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவிலும் அதிக எண்ணிக்கையிலான பரிசுகள் வழங்கப்பட்டது வீரர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது. குறிப்பாக Rated வீரர்களிடமிருந்து மிகச்சிறந்த வரவேற்பு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில், இந்த ஆண்டின் சதுரங்கப் போட்டி ஒரு முன்மாதிரி நிகழ்வாக அமைந்து, எதிர்காலத்தில் மேலும் பெரிய அளவில் போட்டிகளை நடத்த ஊக்கமளிக்கும் வகையில் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

# மில்வாக்கி மாநகர தமிழ்ச்சங்கம்



# மில்வாக்கி மாநகர தமிழ்ச்சங்கம்

# பொங்கல் திருவிழா கொண்டாட்டம்

மில்வாக்கி மாநகர தமிழ்ச்சங்கம் சார்பாக பொங்கல் திருநாளை முன்னிட்டு வாழை இலை விருந்து மற்றும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகள் பிப்ரவரி எட்டாம் தேதி மினோமோனி ஃபால்ஸ் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. தமிழ்ச்சங்கத்தின் நன்கொடையாளர்கள் மற்றும் விற்பனை காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பொங்கல் திருவிழாவைக் கருப்பொருளாகக் கொண்ட புகைப்பட பின்னணி, அழகான மாட்டு வண்டி மற்றும் பொங்கல் அலங்காரங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

சங்க உறுப்பினர்கள் தங்கள் பிறந்த ஊரைக் குறிப்பிடும் வகையில் தமிழ்நாடு மாநில வரைபடம் அமைக்கப்பட்டிருந்தது. சென்னை மற்றும் கோயம்புத்தூர் மக்கள் அதிக எண்ணிக்கையில் மில்வாக்கி பகுதியில் வசிப்பது சுவாரசியமான செய்தியாகும்.

விழாவில் வாழை இலை விருந்தில் சைவ மற்றும் அசைவ உணவுகள் பரிமாறப்பட்டது. தமிழர்களின் விருந்தோம்பல் முறையை விஸ்கான்சினில் நாம் கடல் கடந்து பறைசாற்றியது பெருமைக்குரியது.

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான்**

இல்என்ற வள்ளுவனின் வாக்கிற்கு இணங்க எண்ணற்ற தன்னார்வலர்களும், சங்க நிர்வாகிகளும் இனிப்பு பொங்கல் உள்ளிட்ட இருபதிற்கும் மேற்பட்ட உணவுகளை இன்முகத்துடன் பரிமாற, விருந்து தடபுடலாக நடந்தேறியது. சிகாகோ மதுரை கிச்சன் வழங்கிய உணவின் சுவை அனைத்து மக்களாலும் பாராட்டப்பட்டது.

**"விளையாட்டு வெறும் பொழுதுபோக்கு அல்ல,**
**அது நம் கலாச்சாரத்தின் அடையாளம்."**

என்ற கூற்றிற்கு ஏற்ப பல வகையான குழு விளையாட்டுகளும், பாரம்பரிய விளையாட்டுகளும் நடைபெற்றன. உறியடி, பந்து எறிதல், பளு தூக்குதல் மற்றும் பல விளையாட்டுகளில் மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். சிறுமிகளின் பொங்கல் பாடல்களின் திடீர் நடனம் விருந்தினர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நமது தமிழரின் பாரம்பரிய உறியடி நிகழ்ச்சியை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்று கண்டு மகிழ்ந்தனர். நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக படங்களை வைத்து திருக்குறள் கண்டுபிடிக்கும் நிகழ்ச்சி அனைவராலும் பெரும் வரவேற்பைப் பெற்றது.

விழாவிற்கு மேடிசன் நகரில் இருந்து விஸ்கான்சின் தமிழ்ச்சங்க நிர்வாகக்குழு மற்றும் சங்க உறுப்பினர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைப்பை ஏற்று விழாவை சிறப்பித்தனர். குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் அனைவரும் மனநிறைவுடன் விருந்துண்டு நம் பாரம்பரிய விளையாட்டுகளில் பங்கு பெற்று மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். விளையாட்டில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது. பங்குபெற்ற அனைவருக்கும் கரும்பு, மஞ்சள், வெல்லம் உள்ள பொங்கல் படி பரிசுப்பை வழங்கப்பட்டது.




## சின்சினாட்டி தமிழ்ச் சங்க நிகழ்வுகள்

# சில்லென்ற சின்சியில் குளிர்காலம்!

மார்கழினாலே குளிர் தான், சின்சி மாநகரம் மட்டும் விதிவிலக்கா? அதுமட்டுமில்ல, சின்சி குளிருக்குனு ஒரு தனி குணம் இருக்கு. பலப் பனிப்பொழிவை தாண்டி பற்பல நிகழ்வுகளை எங்க சின்சினாட்டி மாநகரத் தமிழ்ச் சங்கம் வெற்றிகரமாக நடத்தி முடித்திருப்பதில் பெருமை அடைகிறது.

GCTS
Since 2005
Greater Cincinnati Tamil Sangam

முதல் பனிப் புயல், எங்க நகரத்தை வெள்ளைத் துயில்ல மூடிய நாளிலிருந்து, எங்க சங்கத்தோட இதயத்துடிப்பு இன்னும் வெப்பமாக துடிக்க ஆரம்பமாகிடுச்சு. வெளியே பனி பொழிந்தாலும், உள்ளத்தில் செயல் உணர்ச்சி பொழிஞ்சுச்சு.

பனிப்புயல் கடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு, சாலைல பனியோட தடம் இருக்கும் வேளையில, எங்க சங்கத்தின் குளிர்கால விளையாட்டுப் போட்டிகளின் முதற்கட்டமாக, இரண்டு நாள் பிக்கிள்பால் போட்டி உற்சாகமாக தொடங்கியது.

ஆண்கள், பெண்கள் என பல அணிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். வெளியில குளிர் காற்று வீசிகிட்டு இருந்த வேளையில், உள்ளே வியர்வை சிந்திய உற்சாகம் பரவியது. வெற்றி பெற்றவர்கள் பலர் இருந்தாலும், உண்மையில் வென்றது ஒற்றுமை தான்.

அடுத்து நடைபெற்ற சதுரங்கப் போட்டி, சத்தமில்லா சிந்தனையின் திருவிழாவாக இருந்தது. ஆறு வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆரவாரம் ஏதுமில்லை; ஆனா எதிர்பார்ப்பு நிரம்பிய அமைதி இருந்தது. குதிரை தாண்டியது. ராணி நகர்ந்தாள். சிப்பாய் தியாகம் செய்தான். ஒவ்வொரு நகர்வும் ஒரு கதையைச் சொன்னது. சிறுவர் கண்களில் மின்னிய கவனம், பெற்றோரின் முகத்தில் தெரிந்த பெருமை, அந்த தருணங்களைப் பார்த்த தருணம், எங்க இதயம் நிறஞ்சுடுச்சு. “கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு”, என்கிறது போல, அந்த நாள் பலருக்கும் புதிய பாடமாக இருந்தது. வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன. ஆனால் உண்மையான வெற்றி, சிந்திக்கத் துணிந்த ஒவ்வொரு மனசுக்கும் சொந்தமாச்சு.

இந்த பருவத்தின் மற்றுமொரு இனிமையான தருணம், எங்கள் தமிழ்ப் பள்ளி மாணாக்கரின்



திருக்குறள் உரைத்தல் போட்டி. சிறார் அனைவரும் தன்னம்பிக்கையுடன் மேடையில் நின்று குறள்களை மொழிந்தனர். இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான அந்தச் சொற்கள், இன்றைய தலைமுறையின் குரலில் மீண்டும் உயிர் பெற்றன. அது வெறும் போட்டி அல்ல; அது மரபின் தொடர்ச்சியா இருந்துச்சு.

இந்த குளிர்காலத்தின் மற்றுமொரு பெருமையாக, எங்க சங்கத்தின் “சங்கமம்” இதழின் வெற்றிகரமான வெளியீடு. சங்கத்தின் பல உறுப்பினர்களிடமிருந்து கட்டுரைகள், ஓவியங்கள், கவிதைகள் சேகரிச்சு, திருத்தி, செம்மைப்படுத்தி அழகான வடிவில் வெளியிட்டோம். ஒவ்வொரு பக்கமும் ஒரு இதயத் துடிப்பு போல இருந்துச்சு.

எங்க எல்லாருக்கும் இந்த ஆண்டுல, சின்சியின் குளிர்காலம் வெறும் பனியாக மட்டுமில்லை;

அது உறவுகளின் வெப்பமாக இருந்தது.

விளையாட்டின் உற்சாகமாக இருந்தது.

பண்பாட்டின் பெருமையாக இருந்தது.

வசந்தம் வரத் தயாராகலாம், பனி கரையலாம். ஆனால் இந்த குளிர்காலத்தில் உருவான நினைவுகள் கரையாது.

நாங்க மீண்டும் ஒரு முறை சாதித்து விட்டோம்! பருவம் எது வந்தாலும்,

ஒன்றுபட்ட மனங்கள் இருந்தால், ஒவ்வொரு நாளும் ஒரு திருவிழானு,

எங்கள் சின்சினாடி மாநகரத் தமிழ்ச் சங்கம் சாதித்து விட்டது!!

## வாழ்த்துகள்



# அட்டைப்பட ஓவியங்கள் தந்த நம்ம ஊர் ஓவியர்கள்

**முன்பக்க அட்டை படம்**

**அனிதா சுப்புராஜ்**

கொரலைனா தமிழ்ச் சங்கம்

**பின்பக்க அட்டை படம்**

**ஐஸ்வர்யா கே.ஆர்.காட்டேஜ் குரோவ்**

விஸ்கான்சின்





# மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம்

நாற்பத்தெட்டு ஆண்டுகள் பாரம்பரியமிக்க, கட்டணப் பதிவு செய்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட, மிகவும் வலிமையான, அரசியல், மத, சாதிச் சார்பற்ற டல்லாஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம் தொடர் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. தமிழ்க் குடும்பங்களுக்குத் தேவையான அனைத்து வகையான ஆலோசனைகளையும் உதவிகளையும் எவ்வித எதிர்பார்ப்புமின்றி தக்க சமயத்தில் செய்து வருவதோடு பல்வேறு கொண்டாட்டங்களையும் மிகச் சிறப்பாக நடத்திவருகிறது. கடந்த இரு மாதங்களில் நடைபெற்ற பிரமாண்ட கொண்டாட்டங்களின் அதிக விபரங்கள் பின்வருமாறு:

### நிகழ்ச்சி - 1:

டல்லாஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் 2025 கிறிஸ்துமஸ் விழா, டிசம்பர் 6ஆம் தேதி ஆனந்தமும் மகிழ்ச்சியும் நிறைந்த சூழலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குடும்பங்களும் குழந்தைகளும் உற்சாகத்துடன் கலந்து கொண்ட இந்த உறுப்பினர்களுக்கான நிகழ்வு, சமூக ஒற்றுமையையும் பகிர்வின் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திய ஒரு இனிய திருநாள் சந்திப்பாக அமைந்தது.

விழாவின் முக்கிய அம்சமாக, சிறுவர்கள் பல்வேறு இசைக்கருவிகளை வாசித்து தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். கீபோர்டு, வயலின், கிட்டார் போன்ற கருவிகளில் அவர்கள் நிகழ்த்திய இனிமையான இசை, பெற்றோர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தது. இளம் தலைமுறையின் கலைத்திறன், சங்கத்தின் எதிர்காலம் உறுதியான கைகளில் இருப்பதை உணர்த்தியது.

மேலும், சில குழுக்களால் "ஜிங்கிள் பெல்ஸ்" போன்ற கிறிஸ்துமஸ் பாடல்கள் *(Carols)* முதல் தமிழ் கிறிஸ்துமஸ் பாடல்கள் வரை பல்வேறு இசை நிகழ்ச்சிகள் அரங்கேறி, அரங்கம் முழுவதும் திருநாள் உணர்வை பரப்பின. ஒற்றுமையுடன் பாடிய குரல்கள், அன்பும் சமாதானமும் நிறைந்த கிறிஸ்துமஸ் செய்தியை அனைவரின் இதயங்களிலும் பதித்தன.

விழாவின் சிறப்பு நிகழ்வாக, திரு. விக்டர் லூயிஸ் அவர்கள் நடுவராக "இன்றைய தலைமுறையின் வாழ்க்கை - கலக்கலா? கலக்கமா?" என்ற சிந்தனைத் தூண்டும் தலைப்பில் பட்டிமன்றம் நடத்தப்பட்டது. இரு அணிகளும் தங்களது கருத்துகளை நகைச்சுவையுடனும் நுண்ணறிவுடனும் முன்வைத்து, இன்றைய தலைமுறையின் வாழ்க்கை முறை, சமூக ஊடகங்கள், தொழில்நுட்ப முன்னேற்றம், குடும்பப் பிணைப்புகள் போன்ற பல்வேறு அம்சங்களை ஆராய்ந்தனர். இந்த பட்டிமன்றம் அறிவையும் மகிழ்ச்சியையும் ஒருங்கே வழங்கி, பார்வையாளர்களின் பெரும் பாராட்டைப் பெற்றது.

கிறிஸ்துமஸ் திருநாளின் இனிமையை மேலும்

அதிகரிக்கும் வகையில், சிறப்பு ப்ளம் கேக் தன்னார்வலர்களால் அன்புடன் தயாரிக்கப் பட்டது. வீட்டுச் சுவையுடன், அர்ப்பணிப்பும் அக்கறையும் கலந்து தயாரிக்கப்பட்ட இந்த கேக், மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. கேக் வழங்கும் தருணம், பகிர்வின் உணர்வையும் குடும்ப பாசத்தையும் பிரதிபலித்தது.

இந்த விழாவை வெற்றிகரமாக நடத்த பல்வேறு தன்னார்வலர்கள் பின்னணியில் அயராது உழைத்தனர். அவர்களின் ஒருங்கிணைந்த முயற்சியும் அர்ப்பணிப்பும், இந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை மறக்கமுடியாத நினைவாக மாற்றியது.



மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் 2025 கிறிஸ்துமஸ், இசை, சிந்தனை, பகிர்வு மற்றும் ஒற்றுமையின் அழகிய சங்கமமாக திகழ்ந்தது. சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் ஒன்றிணைத்து, அன்பும் அமைதியும் நம்பிக்கையும் நிறைந்த ஒரு புதிய ஆண்டை வரவேற்கும் இனிய துவக்கமாக அது அமைந்தது.

## நிகழ்ச்சி – 2:

டல்லாஸ் மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் பிரமாண்டமான 2026 பொங்கல் விழா, ஜனவரி 17 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆயிரக்கணக்கான தமிழர்களின் எதிர்பார்ப்புகளையும் உணர்வுகளையும் தாங்கிய இவ்விழா, ஒரு சாதாரணத் திருவிழாவாக அல்லாது, ஒரு கலாச்சார மைல்கல்லாக உருவெடுத்தது. 9,000-க்கும் மேற்பட்டோர் உற்சாகத்துடன் கலந்து கொண்ட இந்த முழுநாள் நிகழ்ச்சி, பாரம்பரியம், கலை, சமூக ஒற்றுமை மற்றும் தலைமுறைத் தொடர்ச்சியை ஒருங்கிணைத்த மறக்கமுடியாத திருவிழாவாக அமைந்தது. மொத்தத்தில் இது ஒரு இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் விழாவாக பெருமையையும் பெருமகிழ்வையும் ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

60க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பல குழுக்களாகப் பிரிந்து கடந்த 5 மாதங்களாக, இசை மற்றும் பல்வேறு நடனங்கள் பயிற்றுவித்தல் உட்பட பிற தயாரிப்பு வேலைகளிலும் ஈடுபட்டு எண்ணிய வண்ணம் இவ்விழாவினை சிறப்புற அரங்கேறச் செய்தனர்.

தமிழ் கலாச்சாரத்தின் ஆழமும் அதன் பன்முகத்தன்மையும் இவ்விழாவின் ஒவ்வொரு அங்கத்திலும் பிரகாசித்தன. 150-க்கும் மேற்பட்ட வீணை கலைஞர்கள் இசையின் ஆன்மீக நயத்தை வெளிப்படுத்த, 325-க்கும் மேற்பட்ட பரதநாட்டியக் கலைஞர்கள் பாரம்பரிய நடனத்தின் அற்புதத் துல்லியத்தையும் நயமையும் மேடையில் வெளிப்படுத்தினர். 250-க்கும் மேற்பட்ட கும்மி நடனக் கலைஞர்கள் கிராமிய மகிழ்ச்சியின் உற்சாகத்தைப் பரப்ப, 150-க்கும் மேற்பட்ட மேற்கத்திய நடனக் கலைஞர்கள் கலாச்சார பரிமாற்றத்தின் புதிய முகத்தை அறிமுகப்படுத்தினர்.

அதோடு மயிலாட்டம், பறை, கரகம், ஒயிலாட்டம் உள்ளிட்ட பல்வேறு நாட்டுப்புறக் கலைகள் மேடையில் உயிர்ப்புடன் காட்சியளித்தன. 200-க்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்கள் மற்றும் பாடகர்கள் நாள் முழுவதும் அரங்கேற்றிய இசை நிகழ்ச்சிகள், பார்வையாளர்களின் இதயங்களைத் தொட்டன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் தனித்துவத்துடன் திகழ்ந்தாலும், அனைத்தும் ஒன்றாக இணைந்து தமிழரின் கலைப் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டின.

மதுரையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் திரு. ஞானசம்பந்தன் அவர்களின் கருத்தாழமும் நகைச்சுவையும் கலந்த மேடைப்பேச்சு அனைத்து வயதினரையும் கவர்ந்தது. இத்துடன் மதுரை பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் எழுத்தாளர் திரு. சு.வெங்கடேசன் எழுதிய, தமிழ் மன்னர் பாரியின் வாழ்க்கை வரலாற்றுப் பின்னணி கொண்ட, அதிக விற்பனை கண்ட நாவலான வேள்பாரி எனும் புத்தகத்தைத் தழுவிய 90 நிமிட மேடை நாடகம் அமெரிக்க மண்ணில் கலிஃபோர்னியா, டல்லாஸ் மற்றும் பிற பகுதிகளில் வாழும் தமிழ்க் கலைஞர்களைக்



கொண்டு சிறப்பாக இப்பிரமாண்ட மேடையில் அரங்கேற்றப்பட்டது.

இந்நிகழ்வின் மிக முக்கியமான மற்றும் புதுமையான அம்சமாக, அனைத்து மேடை பின்னணிகள், காட்சியமைப்புகள் மற்றும் விளம்பரப் படைப்புகள் AI தொழில்நுட்பத்தின் மூலம் வடிவமைக்கப்பட்டன. பாரம்பரியத் திருவிழாவிற்கு நவீன தொழில்நுட்பத்தின் அழகிய தொடுதலை இணைத்த இந்த முயற்சி, பார்வையாளர்களுக்கு ஆழமான மற்றும் மெய்மறக்கச் செய்த அனுபவத்தை வழங்கியது. பாரம்பரியமும் புதுமையும் கைகோர்த்த இவ்வமைப்பு, எதிர்கால விழாக்களுக்கு புதிய தரநிலையை உருவாக்கியது.

இவ்விழா, இந்தியத் துணைத் தூதரகம், ஹ்யூஸ்டன் நகரத்தின் மாண்புமிகு துணைத் தூதர் திரு. டி. சி. மஞ்சுநாத் அவர்களால் பெருமையுடன் தொடங்கி வைக்கப்பட்டது. அவரின் வருகை விழாவிற்கு மரியாதையும் சர்வதேச அங்கீகாரமும் சேர்த்தது.

விழாவின் ஒரு முக்கிய அம்சமாக, மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம் தனது ஆதரவாளர்களையும் நிதியுதவியாளர்களையும் சிறப்பித்து கௌரவித்தது. சமூக முன்னேற்றத்திற்கும், தமிழ் மரபின் பாதுகாப்பிற்கும் அவர்கள் அளித்த அளப்பரிய பங்களிப்பு, இந்த விழாவின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. அவர்களின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பே சங்கத்தின் பலத்தையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்துகிறது.

முழுநாள் நிகழ்ச்சியாக இருந்தபோதிலும், பெரும்பாலான பார்வையாளர்கள் தொடக்கம் முதல் இறுதிவரை உற்சாகத்துடன் கலந்து கொண்டது மிகப்பெரிய சாதனையாகும். இது நிகழ்ச்சிகளின் தரத்திற்கும், ஒழுங்கமைப்பிற்கும், மேலும் சமூகத்தில் நிலவும் உறுதியான ஒற்றுமை உணர்விற்கும் சான்றாக விளங்கியது.

விழாவின் விற்பனைப் பகுதியும் மக்களின் கவனத்தை ஈர்த்தது. பல்வேறு விற்பனைக்கடைகளுடன் சேர்ந்து நான்கு பிரபல உணவகங்கள் – *A2B Vegetarian Restaurant, Chennai Caf, Spice Rack* மற்றும் *Salem RR Biryani (Plano)* – தங்களது சுவைமிகு, அசல் தமிழ் உணவுகளால் விழாவிற்கு கூடுதல் விருந்துணர்வை வழங்கின. உணவு, கலை, மகிழ்ச்சி – இம்மூன்றும் ஒன்றிணைந்து திருவிழா அனுபவத்தை நிறைவு செய்தன.

இந்த பிரமாண்ட நிகழ்வை சாத்தியமாக்கிய அர்ப்பணிப்பு மிக்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது:

- சக்திவேல் ராமசாமி (தலைவர்)
- விக்டர் லூயிஸ் (செயலாளர்)
- குபேரன் ராஜமூர்த்தி (பொருளாளர்)
- ப்ரவீணா வரதராஜன் (துணைத் தலைவர்)
- நந்தினி சுபாஷ்சந்திரபோஸ் (இணைச் செயலாளர்)
- பிரகாஷ் சுப்ரமணி (இணைப் பொருளாளர்)
- வெங்கடசுப்ரமணியன் ஆறுமுகநாயனார் (இயக்குநர்)

மேலும், மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கும், நிர்வாகக் குழுவுடன் இணைந்து உற்சாகமாகப் பணியாற்றிய அனைவருக்கும், பின்னணியில் அயராது உழைத்த ஏராளமான தன்னார்வலர்களுக்கும் மனமார்ந்த நன்றியும் பாராட்டும் உரித்தாகும். அவர்களின் ஒருங்கிணைந்த முயற்சியே இவ்விழாவை வெற்றியின் உச்சிக்குக் கொண்டு சென்றது.

எங்கள் பெருமைமிக்க மேனாள் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் நிதியுதவியாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இதயம் கனிந்த நன்றி. அவர்களின் உறுதியான ஆதரவே மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கத்தால் தமிழ் கலாச்சாரத்தை பெருமளவில் கொண்டாடவும், பாதுகாக்கவும், அடுத்த தலைமுறைக்கு பரப்பவும் வழிவகுக்கிறது.

ஒன்றிணைந்த மனங்களும், உறுதியான அர்ப்பணிப்பும், புதுமையுடன் கூடிய பாரம்பரியச் செல்வமும் இணைந்த 2026 பொங்கல், ஒற்றுமை, பெருமை மற்றும் சமூக வலிமையின் நிலையான அடையாளமாக வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.




# தமிழர் திருநாள் விழா

## நியூயார்க் தமிழ்க் கல்விக்கழகம் (நி. த. க), நியூயார்க்

தனக்கென பண்பாடு கொண்டு, கலாச்சாரம் புனைந்து, மரபு பேணி, அறிவியல் பொதிந்து, ஆன்மீகம் அணிந்து, அறம் பொருள் இன்பத்திற்கு இலக்கணம் புனைந்து, காதலும் வீரமும் கண்ணெனக் கொண்டு என்றும் மங்காது மகிழ்ந்து நிற்கும் இனம், நம் தமிழ் இனம். இத்தகைய இனத்தின் மிக முக்கிய திருவிழா “பொங்கல் திருநாள் (அ) தமிழர் திருநாள்”.

பொங்கல் திருநாள் என்பது வெறும் அறுவடை திருவிழா மட்டுமல்ல; அது நமது வாழ்க்கையில் நன்றி, செல்வம் மற்றும் சமுதாய உணர்வை கொண்டாடும் ஒரு விழாவாகும்.

அது தமிழர்களின் தைரியம் மற்றும் நன்றியுணர்வை பிரதிபலிக்கும் சின்னமாகும், இயற்கையின் பராக்கிரமத்திற்கு நன்றி தெரிவிக்கும்

வழியாகும். நமது தமிழ் பள்ளியான நியூயார்க் தமிழ்க் கல்விக்கழகம் *(New York Tamil Academy - NYTA)*, பெரும் உற்சாகம் மற்றும் சமுதாய உணர்வுடன் இந்த ஆண்டின் தமிழர் திருவிழாவை பிப்ரவரி 7ஆம் தேதி, ஸ்டோனி புரூக்கில் அமைந்துள்ள அரங்கத்தில் கோலாகலமாக கொண்டாடியது. இவ்விழா மாணவர்களுக்கான ஓவியம் வரைதல், பெரியவர்களுக்கான கோலப்போட்டி மற்றும் இனிப்பு-காரம் போட்டிகளுடன் இனிதே தொடங்கியது. பள்ளியின் ஆசிரியர்கள் பாரம்பரிய பொங்கல் தயாரிப்பு முறையை மாணவர்களுக்கு விவரித்து “பொங்கலோ பொங்கல்” என்று குரலெழுப்பி, குலவை போட்டு கும்மி அடித்தனர்.

மிகவும் குளிரான நாளாகவும், பனிப்பொழிவு இருந்தபோதிலும், அனைவருக்கும் உற்சாகமான வரவேற்புடன் தமிழர் திருநாளை மாணவர்களுடன் இணைந்து கொண்டாடிய மிகவும் பாராட்டத்தக்கது. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அறிமுகம், பள்ளியின் செயல்பாடுகள், மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகளுக்கான திட்டங்கள், பள்ளியின் ஆண்டு விழா மற்றும் 2025-26 கல்வியாண்டின் நிதி நிலவரம் ஆகியவற்றை நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பகிர்ந்தனர். பள்ளியின் ஆசிரியர்கள் போகிப் பொங்கல், பெரும் பொங்கல், மாட்டுப் பொங்கல் மற்றும் காணும் பொங்கல் கொண்டாட்டங்களை மாணவர்கள் அறிந்து கொள்ள, தெளிவாக விவரித்தார்கள். தமிழர்களுக்கே உரித்தான கிராமிய நடனங்களில் ஒன்றான கரகாட்டம் நிகழ்ச்சி விழாவிற்கு ஆனந்தத்தை கூட்டியது. “கண்டுபிடி கண்டுபிடி” என்ற தமிழ் வார்த்தை விளையாட்டு நிகழ்ச்சியில் மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் கலந்து கொண்டு விழாவிற்கு சிறப்பு சேர்த்தார்கள். இறுதியாக புதிதாக துவங்கப்பட்ட லாங் ஐலேண்ட் தமிழ் அமைப்பின் *(Long Island Tamil Association)* உறுப்பினர் சேர்க்கை, முக்கிய பணிகள் மற்றும் செயல் திட்டங்கள் பற்றிய தகவல் பகிரப்பட்டது.

இவ்விழாவின் கொண்டாட்டத்தின் உச்சமாக, தமிழர்களுக்கே உரித்தான விருந்தோம்பலை வெளிப்படுத்தும் விதமாக அனைவருக்கும் “தலை வாழை இலை” போட்டு தமிழர்களின் பாரம்பரிய மிக்க இரவு உணவு பரிமாறப்பட்டது. இத்தகைய மகிழ்ச்சியான தமிழர் திருநாள் விழாவை நி. த. க. வின் நிர்வாகக் குழுவினர் நன்கு திட்டமிட்டு வெற்றிகரமாக செயல்படுத்தினர்.

வாழ்க தமிழ்!! வளர்க நியூயார்க் தமிழ்க் கல்விக்கழகம்!!!!!!!







# ஐம்பத்தி ஆறாம் ஆண்டை தொடங்கி
# நியூயார்க் தமிழ்ச்சங்கம்

எங்கள் நியூயார்க் தமிழ்ச்சங்கம் வெற்றிகரமாக ஐம்பத்தி ஆறாம் ஆண்டை தொடங்கியது. இந்த ஆண்டு புதிய செயற்குழு பொறுப்பேற்றுக்கொண்டது . முனைவர். குமரப்பன் அண்ணாமலை அவர்கள் தலைமையின் கீழ் வசந்தகுமார் வெங்கடாசலம் நிர்வாகத் துணைத்தலைவராகவும், கனிமொழி பாஸ்கரன் துணைத் தலைவராகவும், சண்முகவேல் செயலாளராகவும், மரு.பிஞ்சி சீனிவாசன் பொருளாளராகவும், பிரபா பாலா இணை செயலாளராகவும் மற்றும் செல்வ லட்சுமி வெங்கடேசன் இணை பொருளாளராகவும் பொறுப்பேற்றனர்.

சனவரி திங்கள் 31, 2026 சனிக்கிழமை அன்று எங்கள் நியூயார்க் தமிழ்ச் சங்கத்தின் பொங்கல் திருநாள் நடந்தது. 12 மணிக்கு சுவையான மதிய உணவுக்குப் பின் பொங்கல் நிகழ்ச்சி அளவில் மிகுந்த உற்சாகத்துடனும் சிறப்புடனும் தொடங்கியது. குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி கலாச்சாரம், இசை மற்றும் மகிழ்ச்சி நிறைந்த ஒரு இனிய மாலை பொழுதினை கழித்தனர்.

இந்த விழாவின் முக்கிய ஈர்ப்பாக பிரபல பாடகர் சத்யன் அவர்களின் இசை நிகழ்ச்சி அமைந்தது. அவரின் உயிரோட்டமான பாடல்கள், கலகலப்பான உரையாடல்கள் மற்றும் பார்வையாளர்களுடன் கொண்ட உற்சாகமான தொடர்பு, அரங்கத்தை மகிழ்ச்சியால் நிறைத்தது. பார்வையாளர்கள் பாடல்களுடன் இணைந்து கைத்தட்டியும், ஆடியும் கொண்டாடினர்.

மேலும், உள்ளூர் கலைஞர்கள் தங்களது திறமைகளை இசை, நடனம் மற்றும் பாடல் மூலம்



மேடையில் வெளிப்படுத்தினர். ஒவ்வொரு நிகழ்ச்சியும் பாரம்பரியத்தின் அழகையும் சமூகத்தின் படைப்பாற்றலையும் பிரதிபலித்து பார்வையாளர்களின் மனங்களில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

செவிக்கு உணவாக இசை நிகழ்ச்சி இருந்தது போல் வயிற்றுக்கு பாரம்பரிய சுவைகள் நிறைந்த விருந்துடன் இரவுணவும் வழங்கப்பட்டது.

இந்த மாபெரும் விழாவிற்கு தாராளமான ஆதரவு வழங்கிய எங்கள் *Title Sponsors* அனைவருக்கும் நியூயார்க் தமிழ்ச் சங்கம் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்:

- டாக்டர் எம். என். கிருஷ்ணன் / டாக்டர் சசிகலா கிருஷ்ணன் குடும்பம்
- காஞ்சனா பூலா / ஜெகதீசன் (ஜாக்) பூலா குடும்பம்
- முனைவர் பாலா சுவாமிநாதன் / பிரபா பாலா குடும்பம்

இந்நிகழ்ச்சி புதிய நியூயார்க் தமிழ்ச் சங்கம் நிர்வாகக் குழுவினரால் சிறப்பாக ஒருங்கிணைக்கப் பட்டு, எங்கள் சமூக அலுவலகப் பொறுப்பாளர்களின் முழுமையான ஆதரவுடன் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.




# சான் பிரான்செஸ்கோ Bay Area தமிழ் மன்றம் பொங்கல் விழாக் கொண்டாட்டம் 2026

தமிழர்களின் பாரம்பரிய திருவிழாவான பொங்கல், வளைகுடா பகுதி தமிழ் மக்களின் சார்பாக தமிழ் மன்றத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஜனவரி 17ஆம் தேதி சனிக்கிழமை அன்று, மக்களின் பேராவலுடனும் பேராதரவுடனும் பொங்கல் விழா திறந்த வெளியில் இனிதே தொடங்கியது.

தமிழ் சொந்தங்கள் குடும்பம் குடும்பமாக வந்து, புதுப்பானையில் பொங்கலிட்டு, வாழை இலை மீது மஞ்சள், இஞ்சி மற்றும் பல்வேறு பழங்களையும் வைத்து “பொங்கலோ பொங்கல்” என மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். வழக்கமாக இந்தியாவில் ஒவ்வொரு குடும்பமும் தங்கள் இல்லங்களில் பொங்கலிடுவது வழக்கம். ஆனால் இங்கு பொதுஉணர்வோடு பல குடும்பங்கள் ஒன்றிணைந்து சமத்துவ உணர்வுடன் இணைந்து கொண்டாடியது விழாவிற்கு தனிச்சிறப்பை வழங்கியது.

இந்தியத் துணைத்தூதரகத்திலிருந்து சிறப்பு விருந்தினர்கள் வருகை தந்து விழாவை மேலும் சிறப்பித்தனர். தமிழர்களின் பாரம்பரிய இசையான பறை இசை முழங்க, மக்களும் ஆடி பாடி மகிழ்ந்தனர். மேலும் சிலம்பாட்டம், கரகாட்டம் மற்றும் உறியாட்டம் போன்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை உற்சாகப்படுத்தின.

அன்று நாள் முழுவதும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நடனம், பாடல் நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது, ஓவியப் போட்டி, கோலப் போட்டி போன்ற போட்டிகளும் நடத்தப்பட்டு, குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். சிறார்களும் சிறுமிகளும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி, பரிசுகளையும் மக்களின் அன்பான பாராட்டுகளையும் பெற்று மகிழ்ந்தனர்.

மாலையில் முதல் நிகழ்ச்சியாக திரு. படவா கோபி அவர்களின் மேடைத் தனி நகைச்சுவை நிகழ்ச்சி மக்களை பெரிதும் மகிழ்ச்சியூட்டியது. அவரது பல்வேறு குரல் நகலெடுப்புகளும் நகைச்சுவை நிகழ்வுகளும் அனைவரையும் கவர்ந்தன.

மாலையின் முத்தாய்ப்பான நிகழ்ச்சியாக, முனைவர் பேராசிரியர் பர்வின் சுல்தானா தலைமையில் மிகவும் நெகிழ்ச்சியானது “காதலா? உறவா? நட்பா?” என்ற சுவாரஸ்யமான தலைப்பில் அமெரிக்காவில் முதன்முறையாக ‘குடவோலை’ முறையில் பட்டிமன்றம் மிகச் சிறப்பாக அரங்கேறியது. இந்நிகழ்ச்சி சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் வகையில் அமைந்து, பார்வையாளர்களின் பெரும் பாராட்டைப் பெற்றது.

அன்று நாள் முழுவதும் மக்கள், வளைகுடா பகுதி தமிழ்மன்றத்தின் சிறப்பான ஏற்பாட்டில் பொங்கல் கொண்டாட்டத்தை மனநிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் அனுபவித்தனர்.

இவ்விழா உண்மையிலேயே பொங்கல் விழா மட்டுமன்றி, பொன் விழாவாக மிளிர்ந்தது.








# டுவின்சிட்டீஸ் தமிழ் அசோசியேசன் (TCTA MN)

டுவின்சிட்டீஸ் தமிழ் அசோசியேசன் (TCTA MN) அமைப்பு மிகுந்த உற்சாகத்துடன் தமிழர் திருவிழாவை Jan 24, 2026 அன்று Wayzata பள்ளியின் கலையரங்கில் கொண்டாடியது. தமிழர் மரபுப்படி தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை குழந்தைகள் மற்றும் நம் TCTP தமிழ் பள்ளி ஆசிரியர்கள் சேர்ந்து பாடியது மனதுக்கு நெகிழ்ச்சி அளித்தது. பரத நாட்டியதுடன் விழா இனிதே துவங்கியதும் , பல்வேறு பாடல்களுக்கு குழந்தைகள் நடனம் ஆடினர். மாறு வேடம் பூண்ட மழலை செல்வங்களின் கிளிப்பேச்சு காதுகளுக்கும் விருந்து படைத்தது. பின்னர் தேர்தலில் வெற்றி பெற்ற புதிய நிர்வாக குழு முறைப்படி பதவி ஏற்றது.

### TCTA நிர்வாக குழு 2026-2027

திரு. ரமேஷ்குமார் வெங்கிடசாமி,தலைவர்
திரு. ஜெயப்பிரகாஷ் முத்துகோபால், துணைத் தலைவர்
திரு. கார்த்திக் ஸ்ரீனிவாசமூர்த்தி,செயலாளர்
திரு. கார்த்திக் சின்னக்கருப்பன் ,துணைச்செயலாளர்
திருமதி. சரண்யா வரதராஜன், பொருளாளர்

புதிய நிர்வாக குழுவின் சார்பாக திரு. ரமேஷ் 2026 ஆண்டிற்கான தோராய நிகழ்ச்சிகளை வெளியிட்டார்.

தமிழர் பாரம்பரிய கலைகளை பறைசாற்றும் வண்ணம் பறை , கோலாட்டம் ஒயிலாட்டம் , சிலம்பாட்டம் மட்டுமல்லாது, நம் TCTP தமிழ் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்கள் பல்வேறு திரைப்பட மற்றும் நாட்டுப்புற பாடல்களுக்கு மகிழ்ச்சியாக நடனம் ஆடினர். இவற்றுள் முத்தாய்ப்பாக அமைந்தது நம் TCTP தமிழ் பள்ளி மாணவர்கள் பங்கு பெற்ற பட்டிமன்றம். இதில் பேசிய Ms.இஷா கிஷோர்(Grade 5) & Ms. ரிவன்யா சரவணன் (Grade 7) இருவரின் பேச்சும் திருவிழாவில் பேசு பொருள் ஆனது. இந்த வருடம் பல்வேறு சிறுவர் சிறுமியர் தனிப்பாடல்களை திறம்பட பாடினர்.

முப்பத்தாறு நிகழ்ச்சிகளுடன், இடைவிடாத ஆறு மணி நேரக் கொண்டாட்டம் இரவு 8 மணிக்கு சூடான, சுவையான இரவு விருந்துடன் இனிதே நிறைவு பெற்றது. சமூக இணைப்பையும் பாரம்பரிய பெருமையையும் கொண்டாடிய ஒரு பொங்கல் விழாவாக இது அமைந்தது.



# சிகாகோ தமிழ்ச் சங்கம்

அமெரிக்காவின் சிகாகோ மாநகரில் 57-ஆவது ஆண்டாகச் சிகாகோ தமிழ்ச் சங்கம் சார்பில் பொங்கல் திருவிழா மற்றும் திருவள்ளுவர் நாள் விழா எல்ஜின் நகரில் உள்ள ஹெம்மென்ஸ் கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**மரபு விருந்து:**

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" எனும் உயரிய பண்பாட்டின் அடிப்படையில், காலை 11 மணி அளவில் பாரம்பரியத் தலைவாழை இலை விருந்துடன் விழா தொடங்கியது. 50-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் இன்முகத்துடன் அறுசுவை உணவைப் பரிமாறினர். சிகாகோவின் பல்வேறு பகுதிகளில் இருந்து 750-க்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

**வரலாற்றுச் சாதனை:**

விழாவின் மிக முக்கிய நிகழ்வாக, அன்னைத் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் விதமாக, இலினாய் பல்கலைக்கழகத்தில் (UIUC) தமிழ்க் கல்வியைத் தொடங்குவது குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இது குறித்துப் பேசிய தெற்காசிய கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் திருமிகு. ரினி, சிகாகோ மற்றும் மத்திய இல்லினாய் தமிழ்ச் சங்கங்கள் இணைந்து இப்பணியை முன்னெடுக்கும் எனத் தெரிவித்தார். இது அமெரிக்கத் தமிழ் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

**கலை நிகழ்ச்சிகள்:**

மதிய உணவிற்குப் பின், 150-க்கும் மேற்பட்ட உள்ளூர் கலைஞர்கள் பங்கேற்ற நடனம்,துடும்பாட்டம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களைக் கவர்ந்தன. அதன் தொடர்ச்சியாக, பிரபலத் திரைப்படப் பாடகர் திரு. சத்யன் மகாலிங்கம் மற்றும் 'The Untitled Band' இசைக்குழுவினர் வழங்கிய துள்ளல் இசை நிகழ்ச்சி அரங்கம் முழுவதும் புத்துணர்வை ஏற்படுத்தியது.



**விருதுகளும் அங்கீகாரமும்:**

தகவல் தொழில் முனைவோர் கூட்டமைப்பின் (ITServe Alliance) தலைவராகப் பொறுப்பேற்றுள்ள முதல் தமிழர் திரு. சிவா மூப்பனார் அவர்களுக்குச் சங்கத்தின் சார்பில் சிறப்பு விருது வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டது. மேலும், சங்கத்தின் இளையோர் குழுவினர் மேற்கொண்டு வரும் சமூக நலத்திட்டங்கள் குறித்தும் விவரிக்கப்பட்டது.

**நன்றி நவிலல்:**

விழாவிற்கான ஏற்பாடுகளைச் சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் மற்றும் தன்னார்வலர்கள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர். கொடையாளர்கள் மற்றும் தொழில்முனைவோரின் ஆதரவுடன் நடைபெற்ற இந்த விழாவானது, புலம் பெயர் மண்ணில் தமிழ்ப் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் ஒரு பாலமாக அமைந்தது.

இவ்விழாவின் சிறப்புக் காட்சிகள் News 7 Tamil தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டு உலகத்தமிழ் உறவுகளின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.




## நியூஜெர்சி தமிழ்ச் சங்கம்

# தைப் பொங்கல் திருவிழா - கண்கவர் நடன நிகழ்ச்சிகள்

*2025*ஆம் ஆண்டின் முதல் நிகழ்ச்சியாக, தமிழரின் முதன்மை நிகழ்ச்சியான தைப் பொங்கல் திருவிழா - கண்கவர் நடன நிகழ்ச்சிகள், கலைவண்ணக் கோலம், கோலாகலமான கூட்டுக் கும்மி, சதுரங்கப் போட்டி, சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த "Zee தமிழ்" தமிழா தமிழா நிகழ்ச்சி புகழ் திரு. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் சிறப்பு விவாத மேடை, மன நிறைவோடு சுவை மொட்டுகளுக்கும் நிறைவைத் தந்த அறுசுவை விருந்து என நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கத்தின் 36 ஆம் ஆண்டு தைப் பொங்கல் திருவிழாவாக பிப்ரவரி 1ஆம் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, கலிபோர்னியா வனத்தீ நிவாரணத்திற்கு நிதி திரட்டி வழங்கப்பட்டது.





